ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 7.] நள ௵ கார்த்திகை ௴ [ஸஞ்சிகை 2.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் தயாநே - வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புகள்.

கீதை உண்டான கால நிர்ணயம்.

ராவ்பஹாதூர் C. V., வைத்யா, M. A., LL. B., என்பவர் பகவத்கீதையின் காலநிர்ணயத்தைப்பற்றி 'இந்தியன் ரிவ்யூ' எனும் மாஸாந்தர பத்ரிகையில் எழுதுகின்றார். அந்த க்ரந்தம் ஒரே க்ரந்தகர்த்தாவினால் ஒரே காலத்தில் எழுதப்பட்டதாம். அது மஹாபாரதம் முதலில் உண்டானபோதே அதில் சேர்ந்திருந்ததாம். பாரதத்தில் அது ஸ்வரஸமாய் அந்தர்க்கதமானதாம். ஜ்ஞாநத்தையும் பக்தியையும் அபேக்ஷித்தவர்கள் பகவத் ப்ரீத்யர்த்தமாகவும், தத்வ ஜ்ஞாநத்தால் பிறந்த த்யாகநிஷ்பத்தியின் பொருட்டும் பாராயணம் செய்வதற்கென்றே அது பிறந்ததாம். ஸ்ரீ க்ருஷ்ணன் அர்ஜுநனுக்குச் செய்த உபதேசத்தை, உபதேச காலத்தின் பிறகு நூறு அல்லது இருநூறு வருஷங்களுக்குள், வ்யாஸரோ, வைசம்பாயநரோ, வேறொரு

ஸ்ரீக்ருஷ்ண பக்தனே பகவத்கீதாரூபமாகச் செய்தனராம். ஸ்ரீக்ருஷ்ணன் ஈஶ்வராவதார மென்பது ஸ்ரீக்ருஷ்ணன் காலத்திலேயே ஏற்பட்ட விஶ்வாஸமாம். பகவத்கீதை பிறந்த காலத்தில் அந்த விஶ்வாஸம் நிஸ்ஸம்ஶயமாக ஸ்திரப்பட்டு நின்றதாம்.

நர நாராயணவதாரர்களான ஸ்ரீக்ருஷ்ணார்ஜுநர்களுடைய சரித்ரமாக ஏற்பட்ட மஹாபாரதத்தினுடைய ஸம்பந்தமற்றுப் பகவத்கீதை முதலில் உண்டானதென்று ஸம்ஶயிப்பது ந்யாய விரோதமாம். ஸ்ரீக்ருஷ்ணன் அர்ஜுநனுக்குச் செய்த ஜ்ஞாநோபதேசமானது நன்றாகத் தர்க்கிக்கப்பட்டால் மஹாபாரதத்தை விட்டு விலகிப் பிறக்க மாட்டாதாம்.

‘அஶோச்யாநந்வஶோசஸ்த்வம் ப்ரஜ்ஞாவாதாம்ஶ்ச பாஷஸே ।
கதாஸூநகதாஸூம்ஶ்ச நாநுஶோசந்தி பண்டிதா:’ ॥

என்கிற ஶ்லோகத்தை ஆதாரமாயுடைய ஜ்ஞாநோபதேஶம் மஹாபாரதத்தைத் தவிர மற்றெங்கேயும் ப்ரஸங்கிக்கமாட்டாதாம். விஶ்வரூபாத்யாயமும், ‘யச்சாவஹாஸார்த்தமஸத்க்ருதோஸி’ எனும் ஹிதவசநங்களும், மற்றோரிடத்தில் ஸந்தர்ப்பப்பட மாட்டாவாம். ஆதலால் தத்வதர்சியான வ்யாஸரோ, அவருடைய ஶிஷ்யரான வைஶம்பாயநரோ, ப்ரதமத்தில் எழுதிய பாரதஸம்ஹிதையிலேயே கீதையையும் சேர்த்திருக்கவேண்டுமாம்.

* * * * * * *

இரண்டு ஸேனைகள் யுத்தோந்முகர்களாய் நின்ற அவஸரத்தில் கீதோபதேசம் நடந்திருக்குமா எனும் ஆக்ஷேபணைக்கு, இந்தியாவில் அக்காலம் க்ஷத்ரியர்கள் தர்ம யுத்தத்தை அவலம்பித்து நின்றார்களென்று ஸமாதாநமாம்.

வைத்யா என்பவர், பாரத ராமாயண சரித்ரங்களைப்பற்றியும், அவற்றைக்குறித்து உண்டாயிருக்கும் இதிஹாஸங்களைப்பற்றியும், பாஶ்சாத்ய வித்யா பரிசயமுள்ளவர் செய்கின்ற யோசனைகளை ஒத்துச் சில க்ரந்தங்கள் இங்கிலீஷில் எழுதினவர். பாரத யுத்தத்தின் ஸந்நிஹித காலத்தில் உண்டான பாரத ஸம்ஹிதையில் இருபத்தி நாலாயிரம் ஶ்லோகங்கள் அடங்கியுள்ளனவென்பதும் அந்த ஸம்ஹிதை தத்காலம் தென்படும் விஸ்தாரத்தை இப்போதைக்கு

இரண்டாயிரத்து மூந்நூற்று அறுபத்தாறு வருஷங்கட்குள்ளும், கிறிஸ்துவின் காலத்து முன்பாகவும் தான் அடைந்த தென்பதும் அவர் கொள்கை.

'டயான் க்ரிஸாஸ்தம்' எனப்பெயர் கொண்ட க்ரீக் தேசத்தான் உபந்யாஸ ஸாமர்த்யத்தில் பெயர்பெற்று, கிறிஸ்து பிறந்த ஐம்பது வர்ஷத்துக்குள்ளாக இருந்தவனும். அவன் தென்னிந்தியாவிலோ, க்ரீக்தேசம் சென்ற இந்தியரிடமோ, லக்ஷ க்ரந்த விஸ்தாரத்தை யடைந்த மஹாபாரதத்தைப்பற்றிக் கேள்வியுற்று, அதைத் தான் எழுதின புஸ்தகத்தில் கண்டிருக்கின்றபடியால், தத்கால மஹாபாரதம் கிறிஸ்து பிறந்ததன் முன்னே யுள்ளதென்றும், இந்திய ககோள சாஸ்த்ர விஷயமாக ஶங்கர தீக்ஷிதரென்பவர் மஹாராஷ்ட்ர பாஷையில் எழுதிய சரித்ரத்தில், ஶ்ரவண நக்ஷத்ரம் முதலாக ஏற்பட்ட நக்ஷத்ர காலக்ரமம் தத்கால மஹாபாரதத்தில் கண்டிருக்கின்றதாயும், அந்தக் காலவிஸ்தாரம் கிறிஸ்து பிறக்கு முன் 450 - வர்ஷங்கட்கு முன்பாக ஒரு விஶ்வாமித்ரரால் ஏற்படுத்தப்பட்டதாயும் நிர்ணயிக்கப்பட்டதால், லக்ஷ க்ரந்த விஸ்தாரமுள்ள மஹாபாரதம் அந்த 450 - வது வர்ஷங்கட்குள்ளாக உண்டாயிருக்க வேண்டு மென்றும் வைத்யா சொல்கின்றார். இக்காரணங்களைக் கொண்டு கிறிஸ்து காலத்தின் முன்னும், அவர் பிறப்பதற்கு 450 - வர்ஷங்கட்குள்ளும் தத்காலம் காணப்பட்ட விஸ்தரித்த மஹாபாரதம் உண்டான தென்று அவர் நிர்ணயிக்கின்றார். அந்த நிர்ணயத்துக்கு அநுகூலமான காரணாந்தரங்களும் உண்டென அவர் சொல்கிறார். அவற்றைக் காட்டினாரில்லை. குறித்த காரணங்களை மட்டும் யோசித்தால் லக்ஷக்ரந்த விஸ்தாரமுள்ள மஹாபாரதம் 2350 வர்ஷங்கட்கு முற்பட்டு உள்ளது என்பது தான் ஏற்படும்.

பாரத யுத்தகாலமும் ஸ்ரீக்ருஷ்ணன் இருந்த காலமும் ஒன்றே. இதைப்பற்றிச் சில ஐரோப்யர் ஊஹத்தை வைத்யா அங்கீகரிக்கின்றார். அதாவது, ருக்வேதம் முடிவுபெற்ற காலத்திற்குப் பிறகும், ஶதபத ப்ராஹ்மணம் உண்டான காலத்திற்கு முன்பும் பாரத யுத்தம் நடந்த தென்பதே. நாம் விமர்ஶித்த வரையில் ஶதபத ப்ராஹ்மணம் பாரத யுத்தத்திற்குப் பூர்வ விஷயங்களையும் குறிக்கின்றது. அது எப்படி யிருந்தபோதிலும், வைத்யாவினுடைய நிர்

ணயப்படிப் பகவத்கீதையானது, உபநிஷத்துக ளடங்கிய ப்ராஹ்மண காலத்துக்கும், வேதாங்கங்களுடைய காலங்கட்கும் மத்ய காலத்தில் எழுதப்பட்டிருக்கவேண்டும். ஆதலால், யாஸ்கர், பாணினி, கல்பஸூத்ரகாரர் முதலானவர்கள் பகவத் கீதைக்குப் பின்பட்டவர்கள்.

* * * * * *

'𑌸𑌹𑌸𑍍𑌰 𑌯𑍁𑌗𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤 𑌮𑌹𑌰𑍍𑌯𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌵𑌿𑌦𑍁𑌃 ।

𑌰𑌾𑌤𑍍𑌰𑌿𑌂 𑌯𑍁𑌗𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾𑌂 𑌤𑍇𑌽𑌹𑍋𑌰𑌾𑌤𑍍𑌰𑌵𑌿𑌦𑍋 𑌜𑌨𑌾𑌃' ॥

இந்தக் கீதா ச்லோகத்தின்படிக் கால ப்ரமாணத்தை மஹாபாரதம், யாஸ்க நிருக்தம், மநுஸ்ம்ருதி முதலான க்ரந்தங்கள் ஆதரிக்கின்றனவாம். நிருக்த பரிசிஷ்டத்தில் அந்த ச்லோகத்தையே ஒரு ப்ரமாணம்போல எடுத்திருக்கின்றதாம். கீதையைத் தவிர்த்து வேறெங்கும் அந்த ச்லோகம் காணப்படவில்லையாம். நிருக்தமும் பரிசிஷ்டமும் அதி பூர்வகால க்ரந்தங்களாம். ஆதலால் கீதை நிருக்த காலத்துக்கு முன்பட்டதாக ஏற்படுகின்றது.

* * * * * * *

'𑌮𑌹𑌰𑍍𑌷𑌯𑌃 𑌸𑌪𑍍𑌤 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇 𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑍋 𑌮𑌨𑌵𑌸𑍍𑌤𑌥𑌾 ।

𑌮𑌦𑍍𑌭𑌾𑌵𑌾 𑌮𑌾𑌨𑌸𑌾 𑌜𑌾𑌤𑌾 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌲𑍋𑌕 𑌇𑌮𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃' ॥

எனும் ச்லோகத்தைப்பற்றி வைத்யா பின்னர் விமர்சிக்கின்றார்.

மநுஸ்ம்ருதியும் புராணங்களும், ஒவ்வொரு கல்பத்துக்கும் பதினாலு மந்வந்தரங்கள் உண்டென்றும், ஒவ்வொரு மந்வந்தரத்துக்கும் தனித்தனியாக ஏழு ருஷிகள் உளரென்றும் சொல்கின்றனவாம். மஹாபாரதம் இவ்வண்ணம் சொல்லவில்லையாம். ஆனாலும் ஹரிவம்சத்தில் 14 - மநுக்களும், ஒவ்வொரு மந்வந்தரத்துக்கும் தனித்தனியே ஸப்தருஷிகளும் கூறப்பட்டிருக்கின்றனராம். வைத்யா, தத்கால மஹாபாரதத்துக்கும் மநு ஸ்ம்ருதிக்கும் ஆவிர்பாவ காலத்தை 2166 - வர்ஷங்கட்கு முன்னென்று நிர்ணயிக்கின்றார். புராணங்கள் அவற்றின் ப்ரக்ருத ரூபத்தை யடைந்த காலம் 1616 வர்ஷங்களுக்கு முன்னென்றும் யோசிக்கின்றார்.

ருக்வேதம் மூன்றே மநுக்களைச் சொல்லுகின்றதாம். அதைக் காட்ட வைத்யா சில வாலகில்ய ஸூக்தங்களை எடுக்கின்றார். இப்

பெயர் கொண்ட பதினெரு ஸூக்தங்களுக்கு ஸாயனுசார்யர் பாஷ்யம் எழுதவில்லை. அவருடைய பாஷ்ய ஸஹிதமாக நம்மிட மிருக்கும் ருக் ஸம்ஹிதா க்ரந்தத்தில் வாலகில்ய ஸூக்தங்களைக் காணேம். ருக்வேதத்தை இங்கிலீஷ் படுத்திய க்ரிப்த் துரையவர்கள் மேற்படி ஸூக்தங்களை மாக்ஸ்முல்லர் துரை தாம் ப்ரசுரப் படுத்திய ருக்வேதத்தில் சேர்த்திருக்கின்றதாயும், அவற்றிற்கு எட்டாவது மண்டலத்தில் 49 - முதல் 59 - வரையில் ஸூக்த ஸங்க்யை ஏற்படுத்தி யிருப்பதாயும் சொல்லுகின்ருர். இவ்வண் ணம் ஏற்பட்ட ஸங்க்யைப்படி 51 - வது ஸூக்தம் ஆரம்பத்தில், 'யயா மநௌ ஸாம்வரணௌ ஸோமமிந்த்ரா பிபஸ்ஸுதம்' என்றும், 52 - வது ஸூக்தம் ஆரம்பத்தில், 'யயா மநௌ விவஸ்வதி ஸோமம் ஶக்ராபிபஸ்ஸுதம்' என்றும் வாக்யங்கள் இருக்கின்றன. 10-வது மண்டலம் 62-வது ஸூக்தத்தில் 'ஸாவர்ண்யஸ்ய தக்ஷிணா வி ஸிந்துரிவ பப்ரதே' என்றும், 'ஸஹஸ்ரதா க்ராமணீ மநுஷ்ய ஹ்யஸ்து மா ருஷந்மநுஸ்ஸூர்யேணாஸ்ய யதமானைது தக்ஷிணா|ஸாவர்ணேர் தேவாஃ ப்ரதிரந்த்வாயுஃ" என்றும் வாக்யங்கள் இருக்கின்றன. வைத்யா என்பவர் இவ்வாக்யங்களைக் காட்டி, ருக்வேதத்தில் மூன்றே மநுக்கள் சொல்லப்படுகின்றார்க ளென்றும், யாஸ்கர் நிருக்தத்தில் 'மநுஸ்ஸாயம்புவோப்ரவீத்' எனும் வாக்யம் காணப் படுகின்ற தென்றும், ப்ரதம மநுவான ஸ்வாயம்புவ மநுவும் தத்கால மநுவான வைவஸ்வத மநுவும், மத்யகால மநுக்களான ஸம்வரண ஸாவர்ணிகளும் தான் கீதாகாலத்தில் ஸ்மரிக்கப்பட் டார்க ளென்றும், பிற்கால விச்வாஸத்திற் கொத்தபடி 14 - மநுக் களுடைய ஸங்க்யையை கீதை ஆதரிக்கவில்லை யென்றும் தீர்மா னிக்கின்ருர்.

பிற்கால விச்வாஸப்படி ஒவ்வொரு மந்வந்தரத்துக்கும் தனித் தனியே ஸப்தருஷிகள் ஏற்பட்டால் மொத்தமாக 108 - ருஷி கள் எண்ணப்பட வேண்டுமாம். கீதையோ என்றைக்கும் உள்ள வர்களாக பூர்வீகர்களான ஒரு ஸப்தருஷிகளைச் சொல்கின்றதாம். 'தஸ்யாஸத ருஷயஸ் ஸப்ததீரே' எனும் வேத வாக்யத்தைச் சொல்லி அதை அநுஸரித்து, ப்ருஹதாரண்யகோபநிஷத்,

'ப்ராணா வா ருஷய: ப்ராணா ஹ்யேதே தடாஹ। * * * அயமேவ கௌதமோ ஭ரத்வாஜ: * * * அயமேவ விஶ்வாமித்ரோ ஜமதக்னி:। * * * அயமேவ வஸிஷ்ட: கஶ்யப:। * * * வாகேவாத்ரி:' என்று சொல்லுகின்றது. இவ்வாக்யங்களை அவ்வுபநிஷத் நாலாவது அத்யாயம் இரண்டாவது ப்ராஹ்மணத்தில் கண்டுகொள்ளலாம்.

மேல்சொன்ன மந்த்ர த்ரஷ்டாக்களைக்குறித்துத் தான் 'மஹர்ஷய: ஸப்த பூர்வே' என்று கீதையில் சொல்லப்பட்டதாம். இப்போது பாரதத்தைக் கண்டால் மந்வந்தரங்கள் தோறும் தனித்தனியே ஸப்தர்ஷிகள் இருந்ததாக ஏற்படுகின்றதாம். கீதையில் குறித்த ஸப்தர்ஷிகளும் மநுக்களும் பகவானுடைய மாநஸீக புத்ரர்க ளென்றும், ஸர்வ ப்ரஜைகளும் அவரிடமிருந்து உண்டானர்க ளென்றும் கீதை விவரிக்கின்றது. இந்த ப்ரக்ரியைகள், கிறிஸ்து பிறப்பதன் முன் 250 - வருஷங்கட்குப் பகுகாலம் முன்பட்டுக் கீதை உண்டாயிருக்க வேண்டும் என்பதைக் காட்டுகின்றனவாம்; அதாவது வேதாங்க காலங்களிலேயே அது இருந்திருக்க வேண்டுமாம்.

* * * * * *

இப்படி யோசித்த பிறகு வைத்யா மற்றொரு கீதா ஶ்லோகார்த்தத்தை யோசிக்கின்றார். அதாவது :—'மாஸாநாம் மார்கஶீர்ஷோஹம் ருதூநாம் குஸுமாகர:' என்பதே. இதனால் கீதை உண்டான காலத்தில் ஒவ்வொரு வர்ஷமும் மார்கழி மாஸத்தில் பிறந்த தென்றும், அப்போது தான் வஸந்த ருதுவும் ஆரம்பித்த தென்றும், வர்ஷாரம்ப ருதுவையும் மாஸத்தையும் தமது விபூதியாகப் பகவான் வெளியிட்டார் என்றும் அவருடைய அபிப்ராயம்.

வேதத்தில் மாஸங்கட்குச் சைத்ரம் வைஶாகம் என்று பெயர் இல்லையாம்; அவை மது மாதவ என்று சொல்லப்பட்டனவாம். ஶதபத ப்ராஹ்மணம் முதல் பத்து அத்யாயங்களில் மாஸங்கட்கு அப்பெயர்கள் தான் காணப்படுகின்றனவாம், ஶங்கர

தீக்ஷிதர், அவ்வத்யாயங்கள் 5000 - வர்ஷங்கட்கு முற்பட்டன வென்று நினைக்கின்றனராம். பதினோராவது அத்யாயத்தில் மாதவ மாஸம் வைஶாக மாஸமென்று சொல்லப்பட்டதாம். இவ்வத்யாயம் 4000 - வர்ஷங்கட்கு முன் உண்டானதாம். 3500 - வர்ஷங்கட்கு முன் உண்டான வேதாங்க ஜ்யோதிஷத்திலும், சைத்ர வைஶாகாதி மாஸ நாமங்கள் வழங்கப்பட்டனவாம். மஹாபாரத அநுஶாஸந பர்வத்திலும் மாஸங்கள் மார்கழி மாஸம் முதலாக எண்ணப்பட்டனவாம். அதனுடைய 106,109 - வது அத்யாயங்களால் பாகவத ஸம்ப்ரதாயஸ்தர்கள் அந்த க்ரமத்தை அநுஸரித்தார்களென்று ஊஹிக்கப் பொருந்துமாம். க்ருஹ்ய ஸூத்ரங்களிலும் மார்க்கஶீர்ஷாதியாக மாஸங்கள் எண்ணப்பட்டனவாம். நக்ஷத்ரங்கள் க்ருத்திகைபாதியாக - 2000 வர்ஷங்களுக்கு முன் எண்ணப்பட்டனவாம். அதற்குப் பிறகு தான் ஸித்தாந்திகள் அவற்றை அஶ்வினியாதியாக எண்ணினார்களாம். வேதகாலங்களிலும் க்ருத்திகையே முதல் நக்ஷத்ரமாம்; மார்கஶீர்ஷம் முதல் மாஸமாம். வேதாங்க ஜ்யோதிஷ ப்ரகாரம் வர்ஷம் மாக மாஸத்தில் பிறந்ததாம். இவ்வித யோசனைகளால், கீதா காலத்தில் வர்ஷம் மார்கஶீர்ஷத்தில் பிறந்ததாக ஜனங்களுக்குள் ஆசார மிருந்ததென்றும், ஆதலால் கீதை வேதாங்க ஜ்யோதிஷம் முதலான க்ரந்த காலங்களுக்கு முன்பட்ட தென்றும் வைத்யா நிர்ணயிக்கின்றார்.

* * * * * *

இந்த யோசனைகளின் பலம் என்னெனில்: 'ஸ்ரீ க்ருஷ்ணன் அவதார புருஷன் எனும் விஶ்வாஸம் அவனுடைய காலத்திலேயே ஜனங்களுக்குள் பரவினது; அவனது உபதேசத்தால் பிறந்த பாகவத ஸம்ப்ரதாயத்துக்கு அவனே குரு; அவனே தைவம்; அவனே கீதாரஹஸ்யத்தை அர்ஜுனனுக்கு உபதேசித்தான்; அவ்வுபதேசத்தை அவனுடைய பக்தரான வ்யாஸரோ வைஶம்பாயனரோ ஶ்லோகரூபமாக இயற்றிப் பாரதம் முதல் முதல் எழுதினபோது அதனுள் சேர்த்தார்கள்; மோக்ஷ ப்ரயோஜனமான ஜ்ஞானபக்திகளை அபேக்ஷித்தவர் நித்யம் பாராயணம் பண்ணவேண்டுமென்று கீதை உண்டானது; என்று இவ்விதமான முடிவுகள் தான்.

* * * * * *

கீதையைப்பற்றிய சில விஷயங்கள் 'ஆர்யா' பத்ரிகையில் அரவிந்தகோஸ் எழுதியிருக்கின்றார். லோகோபகாரமாக அவை 'ஹிந்து' பத்ரிகையிலும் அச்சிடப்பட்டிருக்கின்றன. கீதையை யாரோ ஒருவன் புதிதாய் எழுதி மஹாபாரதத்தில் கோத்துவிட்டானெனும் ப்ரமையைக் கோஸ் அநாதரிக்கின்றார். இப்படி எண்ணப் போதுமான ஸாக்ஷ்யம் இல்லையென்றும், இன்னும் முதலே ஸாக்ஷ்யம் கிடைக்காதென்றும், க்ருஷ்ணார்ஜுந ஸம்வாதம் உண்மையென்றும், 'க்ருஷ்ணாய தேவகீபுத்ராய' எனும் சாந்தோக்ய உபநிஷத்வாக்யம் ஸ்ரீ க்ருஷ்ணன் உண்மையாகப் பாரத காலத்தில் இருந்தாரெனக் காட்டுகின்றதென்றும், ஸர்வேச்வரனே ஸ்ரீ க்ருஷ்ணனாய் அவதரித்தானென்றும், அக்காலத்தில் மநுஷ்யர்க்குள் ச்ரேஷ்டனாயும் அவர்க்கெல்லாம் ப்ரதிநிதியாயும் நின்ற அர்ஜுநனே ஸ்ரீ க்ருஷ்ணனுடைய சிஷ்யனென்றும், பாரத யுத்தத்தில் அவன் பகவானுடைய ஓர் கருவியாக விருந்தானென்றும், ஸர்வஜ்ஞனான பகவான் யாவர்க்கும் மறைவில்நின்று யாவர்க்கும் தெரியாமலே தனது ஸங்கல்பத்தாலேயே அந்த யுத்தத்தை நடத்திவைத்து, அந்த அவஸரத்தில் அர்ஜுநன் தர்மஸூக்ஷ்மத்தைக் காணாது திகைக்கவே, பகவான் லோகத்தில் மநுஷ்யன் இருப்புக்கும் செயலுக்கும் கதியையும் உத்தேசியதையையும் ப்ரயோஜநத்தையும் வெளியிட்டானென்றும் கோஸ் விவரிக்கின்றார். கீதா மாஹாத்ம்யத்தையும் பரக்கச் சொல்கின்றார்.

* * * * * *

ஸ்ரீ க்ருஷ்ணன் ப்ராப்யனாயும் பரமாசார்யனாயும் ஏற்பட்ட பாகவத ஸம்ப்ரதாயம் 2500 வர்ஷங்கட்கு முன்பட்டே இருந்ததாயும் சொல்கின்றார். அது தான் அநாதி ஸம்ப்ரதாயம். 'இமம் விவஸ்வதே யோகம் ப்ரோக்தவாநஹமவ்யயம் । விவஸ்வாந் மநவே ப்ராஹ மநுரிக்ஷ்வாகவே(அ)ப்ரவீத் ॥ ஏவம் பரம்பராப்ராப்தம் இமம் ராஜர்ஷயோ விது: । ஸ காலேநேஹ மஹதா யோகோ நஷ்ட: பரந்தப ॥ ஸ ஏவாயம் மயா தே(அ)த்ய யோக: ப்ரோக்த: புராதந: । பக்தோ(அ)ஸி மே ஸகா சேதி ரஹஸ்யம் ஹ்யேததுத்தமம் ॥' எனும் கீதா ச்லோகங்களின் அர்த்தத்தை அரவிந்தகோஸ் நன்றாக ஸ்மரித்தெழுதி

ஞர். பகவான் இக்ஷ்வாகு வம்ஸஸ்தர்களால் உபாஸிக்கப்பட்டவர் என்பது, விபீஷணனைக்குறித்து ஸ்ரீராமனால் சொல்லப்பட்ட 'ஆராதய ஜகந்நாதம் இக்ஷ்வாகுகுலதைவதம்' எனும் வசநத்தாலும், அயோத்தியில் நாராயணனுக்கு ஆலயம் உண்டென்பதாலும், அங்கே ஸ்ரீராமனே 'நாராயணமுபாகமத்' என்கிறபடியே பகவானை உபாஸித்தாரென்றும் ஏற்படுகின்றபடியாலும் ஸுப்ரஸித்தம்.

* * * * * *

தேசாந்தரஸ்தரும் மதாந்தரஸ்தரும் மதவிஷயத்தில் நமக்கு ஆப்தரல்லர். மதாந்தர தூஷிதமான புத்தி, அதனாலுண்டான பக்ஷபாதத்தை முற்றிலும் அதிக்ரமிக்கமாட்டாது. ஸ்வமத துர்பலங்களையும் அது கணிசிக்கமாட்டாது. அவர்களுடைய ஸஹவாஸமே நமக்குள் நம்முடைய ஸம்ப்ரதாய விஸ்வாஸத்தைக் கெடுக்கும். இப்படி யுண்டான கேடோ பலவாறாக ப்ரகாசிக்கின்றது. பாஸ்சாத்யவித்யையின் பாரத்தைக் கண்டவர்களெனக் கொள்ளக் கூடிய வைத்யா அரவிந்தகோஸ் முதலானோர் வைதிக ஸம்ப்ரதாயஸ்தர் என எண்ணக்கூடாதவர். பாஸ்சாத்ய வித்யை ஒன்றிலேயே ஊன்றி நிற்கும் நம் சிறுவர்கள், அவர்கள் வசநங்களையாவது ஆதரிப்பாரென்று யோசித்து இவ்வண்ணம் எழுதலானோம்.

நம் சிறுவர்களின் தத்காலநிலை ஸந்தோஷிக்கத்தக்கதன்று. காலதேச வைகுண்யம் அவர்களை ஸஹவாஸ தோஷத்தில் விட்டது. ஸஹவாஸ தோஷத்தால் துர்வாஸனைகள் தலையெடுத்து விபரீதேச்சைகள் ஜநிக்கின்றன. ஆதலால் அவர்கள் துராசாரப்படு குழிகளில் போய் விழுகின்றனர். பரர் சொற்களை ஹிதமென்று ப்ரமித்துத் தம் முன்னோர் ஏற்படுத்திய மர்யாதைகளை அவமதிக்கின்றனர்; ஸந்மார்க்கங்களைக் கடக்கின்றனர். தாம் கெடுவதை அறியாமலே, 'ஸ்வயம் நஷ்டா ஜநா நாஸ்திகா:' என்கிறபடியே, லோகாந்தரத்தை நிராகரித்து ஸ்வாத்மத்ரோஹம் புரிகின்றனர். 'ந மாம் துஷ்க்ருதினோ மூடா: ப்ரபத்யந்தே நராதமா: । மாயயாபஹ்ருதஜ்ஞாநா ஆஸுரம் பாவமாஸ்ரிதா: ॥' எனும் பகவத்வாக்யத்துக்கு விஷயமாகின்றனர்.

இது நமக்கு ஶோகஸ்தாநம். எவ்விதமாக யோசித்தாலும் நம் போலியர் மோக்ஷார்ஹரல்லர். ஆகிலும் நாம் மோக்ஷார்த்திகளே. ஆதலால், 'நைதாந்விஹாய க்ருபணாந் விமுமுக்ஷுரேக:' என்கிற ப்ரஹ்லாத வசநம் நம்மைப் பாதிக்கின்றது.

பகவத் ஸங்கல்பம் எப்படியோ? அவன் முதல் உபதேசித்த ஜ்ஞாநம் 'காலேநேஹ மஹதா நஷ்ட:' என்று அவன் சொன்னபடியே நஷ்டமாயிற்றன்றோ? அதற்கும் காரணம் லோகத்தாருடைய பாப ஸமுதாயமன்றோ? அவ்வண்ணமே அது இப்போதும் நஷ்டமடைந்து போமோ? அதை அவன்தான் அறிவன்.

* * * * * *

முகுந்த மாலா வ்யாக்யாநம்.

திருக்குடந்தை உ. வே. சி. ர. ஸ்ரீநிவாஸபாட்ராசார்யர் ஸ்வாமி, தமது பித்ருக்ருதமான மணிப்ரவாள வ்யாக்யாநத்துடன் அச்சிடப்பட்ட 'முகுந்த மாலா' புஸ்தகமொன்றை நமது பார்வைக்கு அனுப்பியிருக்கின்றார். ஆழ்வார் திருவாய்மலர்ந்தருளிய ஶ்லோகங்களின் புஷ்கலமான அர்த்தங்களை ஜ்ஞாதாக்கள் ஸ்வயம் அநுபவித்துப் பிறரும் அநுபவிக்கவேண்டி வெளிப்படுத்திய விஷயத்தில் குணதோஷ சிந்தனைசெய்ய யாம் ஶக்தரல்லோம். ஆகிலும் க்ரந்தத்தைச் சிறிது வாசித்தோம். ஒவ்வொரு ஶ்லோகத்துக்கும் அவதாரிகை முற்படவும், அந்வயப்ரகாரம் பதங்களின்பேரில் உரை சொல்லிப் பின்னர் விஶேஷார்த்த ப்ரதிபாதகமான வ்யாக்யாநம் விஸ்தாரமாகவும் செய்யப்பட்டுளது. முடிவில் ஶ்லோகங்களின் ஸமுதாயார்த்தம் எளிய தமிழில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆழ்வார்களும் ஆசார்யர்களும் பகவத்குணாநுபவம் செய்தது, அவர்கள் பாசுரங்களால் ப்ரகாசிக்கின்றது. அப்பாசுரங்களின் வசநங்களை விஶேஷார்த்தங்கள் அநுஸரித்துப் பெருகுகின்றன. அவை ஜ்ஞாந பக்திகளால் ஆசார்யர்களுடைய ஸாத்ருஶ்யத்தை வஹித்த வித்வான்களுக்குத் தான் புலப்படும். முகுந்தமாலா வ்யாக்யாநம் பகவத்குணாநுபவம் செய்பவர்களுக்குப் பேருதவி செய்யும். பகவத் விஷயப்படியை ஒட்டி இவ்யாக்யாநம் செய்யப்பட்டது. இவ்யாக்யாநமின்றிக் குலசேகரனுடைய ஶ்லோக தாத்பர்யம் ஸாமாந்ய பக்த ஜநங்கட்குப் புலப்

பட மாட்டாது. ஆதலால் அவர்கள் இந்நூலை உகந்து கொள்வார் என்பதில் ஸந்தேஹமில்லை.

இக்ரந்தகர்த்தா இன்னும் பல ஸ்தோத்ரங்களுக்கு மணிப்ரவாள வ்யாக்யாநம் செய்தருளி இவ்விதமான மஹோபகாரத்தை வ்ருத்தி பண்ணியிருக்கின்றார். திருக்குடந்தையில் ஏற்பட்டிருக்கும் தேசிக ஸம்ப்ரதாய விவர்த்திநீ ஸபையார் தேசிகனுடைய பஹு ஸ்தோத்ரங்களை மணிப்ரவாள வ்யாக்யாநத்துடன் அச்சிட்டு வெளிப்படுத்தி யிருக்கின்றார்கள். தேசிக பக்தர்கள் அந்தப் புஸ்தகங்களை வாங்கி வாசிக்கவேண்டியது அவச்யம் தான்.

* * * * * *

பாச்சாத்ய வித்யாநிஷ்டர்கள் பகவத் ஸ்தோத்ரங்கட்கு விஸ்தரித வ்யாக்யாநங்களை அபேக்ஷிப்பது துர்லபம். ப்ரதமத்தில் ஸ்தோத்ரங்களே அவர்கள் ச்ருதிபதத்தை அடையமாட்டா. கைமுதிக ந்யாயத்தால் வ்யாக்யாநங்கள் அவர்கள் தர்சநபதத்தை எவ்வாறு அடையும்? பகவதுபாஸ்திக்கு வாரத்தில் ஒருநாள் ஒரு மணி ஸாவகாசம் போதுமானதென்று எண்பவரை அவர் சேர்ந்தவர். பகவதுபாஸனையால் அந்தப் பொழுதும் வீண்படுமென்று நினைப்பாருமுளர். பாகவதனுக்குப் பகவத்ஸ்மரண மின்றிக் கழியும் ஒவ்வொரு முஹூர்த்தமும் க்ஷணமும் வீணே கழிந்ததாகத் தோற்றும். க்ருஷ்ணன்தன்னிலே உயிர்தரிப்பார் மற்றொன்றை நினைப்ப தரிது. அவனைக் காணாத விநாடி அவர்க்கு யுகமாய் வளரும். அவர்களுடைய நேத்ரங்கள் பகவந் மூர்த்தி தர்சநத்தில் களிக்கும்; காதுகளோ அவன் கதாச்ரவணத்தில் த்வரிக்கும்; வாய் அவன் நாமஸங்கீர்த்தநத்தில் ரஸிக்கும்; கைகளோ அவன் குற்றேவல் புரியும். பகவான் அவர் சித்தங்களை விட்டகலான். ஒவ்வொரு வேளையில் அவர்கள் பகவானுடைய த்யாந ப்ரகர்ஷத்தால் அவனுடன் அபேதத்தை அடைவார்கள்.

இவ்வித பக்தி வாரத்தில் ஒரு மணி பகவானை நினைத்துக் கைகூடாது. “[illegible]” எனும் உத்தவ வாக்யப்படியே புருஷனுடைய ஸர்வ ப்ரவ்ருத்திகளும் பகவத்பக்திக்கு ஸாதநங்களாய் முடியவேண்டும்.

இப்படிப்பட்ட பரபக்தியையே தநமாகப் பெற்ற மாலுகந்த வாசிரியர் வார்த்தைகளின் மஹிமையை முகுந்தமாலா வ்யாக்யாநம் போன்ற நூல்கள் பரக்கக் காட்டுகின்றன. பகவானுடைய கதாம்ருதத்தை லோகத்தார் பருகும்படி, ‘ஶ்ருதம் ஸம்விபஜந்தி யெ ஸஜ்ஜநா:’ என்கிறபடியே, விஸ்தாரமாக நிரூபணம் செய்பவர்தான் பஹுஶ்ருதாக்களெனப்படுவார்கள்.

* * * * * * *

**தேசிக த்வேஷம்.**

நமது மித்ரர் ஹைகோர்ட்டு வக்கீல் நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர், ஆடி ஆவணி மாஸ ஸஞ்சிகைகளில் ‘துராக்ரஹ நிராக்ருதி’ யெனும் புஸ்தகத்தை, தேசிக த்வேஷம் ப்ரகாசிக்க வெழுதின விஷயமாக நாம் எழுத நேர்ந்த அம்ஸத்தைக் கண்ணுற்று, “ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் விஜயத்வஜம் போன்ற இத்தீபிகையில், ‘ஸமெரநாநாம் வெஷஜநநீ விஜஹாஸ்வ ஸக்யா’ என்று நம் ஆசிரியர் அருளிச்செய்ததையே ஶிரஸாவஹித்து, அதற்கு விரோதிகளான விஷயங்கட்கு ஸர்வ ப்ரகாரத்தாலும் இடங்கொடுக்கக்கூடா தென்று அடியோங்களுடைய விண்ணப்பம். * * * பகவதாராதந ரூபமான வைஷ்ணவ ஐக்யாபிவ்ருத்தியை ப்ரதாநமாக இத்தீபிகை நடக்கடவது. * * * இனியாவது அந்யோந்ய ப்ரஸாதந ப்ரகாரங்களைத் தெளிந்து, த்வேஷாபிஸந்தியை மறந்து, ஒருவர்க்கொருவர் ‘ஈர்த்தவாய் தெரியாமல் வஜ்ரலேபகடித மானாற்போலே பொருந்திப் போரும்’ வண்ணம் தத்கால ஸ்திதியையும் நன்று பராமர்சித்து வர்த்திக்க நமக்கு நந்தீபிகை பரமோபகாரமாக வேண்டும்.” என்றிவ்விதமாக எழுதியிருக்கின்றார். இது ஆப்தவசநமே. நாம் எழுதிய குறிப்புகளில் பரநிந்தை செய்தோமில்லை. அவற்றை நாம் எழுத நேர்ந்த காரணங்களையும் வெளியிட்டோம். துராக்ரஹ நிராகரண மெனப்பெயர்கொண்ட தேசிக நிந்தாக்ராந்தம் நம்மை உத்தேசித்துப் பிறந்தமையால், அதைப் பார்ப்போர்க்குக் கிஞ்சித் ஸமாதாநமாக நாம் எழுதவேண்டியதாயிற்று.

# த்ரிதசாலயம்.

பிறகு பீமன் பகுவனங்களைத் தாண்டி ஹேமபத்மங்கள் ப்ரகாசிப்பதோர் பெரிய நதியையும் அதன்கரையில் ஸௌகந்திக வனத்தையும் தர்சித்தான். வனவாஸத்தால் மிகவும் கஷ்டமடைந்த தன்னுடைய ப்ரியையையும் ஸ்மரித்தான்.

ரம்யமான கைலாஸ சிகரத்தில், குபேரன் மாளிகையின் ஸமீபத்தில், மலையருவியின் அருகே ஒரு சுபமான வனத்தின்கண், விசாலமாக நிழல் விரிக்கும் பல வ்ருக்ஷங்களால் சூழப்பட்டுப் பொற்றாமரைகளால் மூடப்பட்ட திவ்ய புஷ்கரிணியைப் பீமஸேனன் கண்டான். அதில் அம்ருதரஸம் போன்று குளிர்ந்த தெண்ணீரைச் சாப்பிட்டான்; மிகவும் களித்தான். அது யக்ஷராஜனுக்கு க்ரீடாஸ்தானம்; தேவர், ருஷிகள், யக்ஷர், கந்தர்வர்கள் இவர்கள் ஸஞ்சரிக்குமிடம்; யக்ஷ ராக்ஷஸர்களால் ரக்ஷிக்கப்பட்டது. அவர்கள் முநிவேஷத்துடன் ஸர்வாயுதங்களையும் தரித்துக்கொண்டு பீமஸேனன் அவ்விடம் வந்ததைக் கண்டார்கள். "நீ யார்? ஏன் இவ்விடம் வந்தனை?" என்று அவனைக் கேட்டார்கள்.

"நான் பாண்டவன். தர்மராஜன் ஸஹோதரன். நாங்கள் பதர்யாச்ரமத்தில் வஸிக்கின்றோம். அங்கே ஸௌகந்திக புஷ்பமொன்றைப் பாஞ்சாலீ பார்த்தனள். இவ்விடமிருந்து காற்றடித்து அது அங்கே விழுந்திருக்கவேண்டும். அப்புஷ்பத்தை மிகுதியாக அவள் வேண்டினள். அவள் ப்ரியத்தைச் செய்ய நான் இங்கே வந்தேன்" என்றான் பீமஸேனன்.

"இது குபேரன் க்ரீடாஸ்தானம். தேவர், ருஷிகள், யக்ஷர்கள், கந்தர்வர்கள், அப்ஸரஸ்ஸுகள் இவர்களும் யக்ஷராஜன் அநுமதி பெற்று இங்கு ஸஞ்சரிப்பார்கள்; மலர்களையும் கொய்வார்கள். மநுஷ்யர் இங்கே வரக்கூடாது. வேண்டுமானால் குபேரன் அநுமதி பெற்று மலர்கள் கொள்வாய்" என்று சொன்னார் ராக்ஷஸர்கள்.

"நான் க்ஷத்ரியன். ஒருவரையும் யாசிக்கமாட்டேன். இந்தப் புஷ்கரிணீ மலையருவியில் உண்டாயது. இங்கே யாவர்க்கும் பாத்யம் ஸமாநம்" என்றான் பீமஸேநன். உடனே குளத்தில் அவன் இறங்கவும் ராக்ஷஸர்கள் அவனைத் தடுத்தனர். பிறகு பீமஸேநனுடைய ப்ரஹாரங்களை ஸஹிக்க முடியாமல் அவர்கள் ஓடிப்போனார்கள். யக்ஷராஜனிடம் போய் முறையிட்டார்கள். யக்ஷராஜனும், "க்ருஷ்ணா நிமித்தம் பீமஸேநன் வேண்டிய புஷ்பங்களைப் பறித்துக்கொள்ளட்டும். இது எனக்கு முன்னமே தெரிந்தது தான்" என்று சொன்னார். ராக்ஷஸர்களும் குளத்தினிடம் திரும்பி வந்து அதில் விளையாடிக்கொண்டிருந்த பீமனைக் கண்டனர்.

பீமஸேநன் இவ்வண்ணம் நிற்க, தர்மராஜன் பதர்யாச்ரமத்தில் யுத்தத்தை அநுமிக்கத்தக்கப் பல அடையாளங்களைக் கண்டார். பீமஸேநன் அவ்விடம் இல்லையென்று தெரிந்துகொண்டார். பாஞ்சாலியையும், நகுல ஸஹதேவர்களையும் பீமனைப் பற்றி வினவினார். பாஞ்சாலியும் ஸௌகந்திக புஷ்பங்களின் பொருட்டுத் தன் சொற்படிப் பீமஸேநன் ஈசாந்ய திசையாக ப்ரயாணப்பட்டுச் சென்றதைச் சொன்னாள். உடனே யுதிஷ்டிரரும், கடோத்கசனையும் அவனுடன் வந்த ராக்ஷஸர்களையும் ஆஜ்ஞாபிக்கவே, அவர்கள் பாண்டவர்களையும் பாஞ்சாலியையும் ப்ராஹ்மணர்களையும் எடுத்துக்கொண்டு ஸௌகந்திக புஷ்கரிணியை உத்தேசித்துச் சென்றார்கள்.

அவ்விடம் அவர் வந்து சேரவும், அடிபட்ட ராக்ஷஸர்களையும், குளக்கரையில் கோபத்துடன் வீற்றிருந்த பீமஸேநனையும் யுதிஷ்டிரர் முதலானவர்கள் கண்டார்கள். தர்மபுத்ரர் பீமஸேநனை ஆலிங்கநம் செய்துகொண்டு, "என்ன இப்படி ஸாஹஸம் செய்தாயே! தேவர்க்கு அப்ரியம் செய்தாயே! என்பொருட்டு இனி இவ்வண்ணம் செய்யாதே" என்று சொன்னார். பிறகு ராக்ஷஸர் அவ்விடம் பாண்டவர்களையும் ப்ராஹ்மணர்களையும் பார்த்தார்கள். அவர்களை வணங்கினார்கள். தர்மராஜனும் அவர்களுக்கு ஸமாதாநம் சொன்னார். பிறகு குபேரன் அறிந்தே, அவர்கள் கந்தமாதந பர்வதத்தில் அர்ஜுநன் வரவை எதிர்பார்த்துக்கொண்டு தங்கியிருந்தார்கள். வைச்ரவணன் ஸ்தாநத்தை எவ்வண்ணம் பார்க்கப் பொருந்துமென்று தர்மபுத்ரர் ப்ராதாக்களு

டன் ஸம்பாஷித்துக்கொண்டிருக்கையில் அசரீரிவாக் உண்டாகி, "இந்தக் கந்தமாதந பர்வதம் தாண்டி அப்புறம் செல்ல உனக்கு ஸாத்யப்படாது. வந்த வழியே பதர்யாச்ரமத்துக்குச் செல். அங்கிருந்து ஸித்தசாரண ஸேவிதமான வ்ருஷபர்வாவின் ஆச்ரமத்துக்குப் போ. அங்கிருந்து புறப்பட்டு ஆர்ஷ்டிஷேணருடைய ஆச்ரமத்துக்குப் போய், அங்கே வஸித்துக்கொண்டிரு. அதன் பிறகு குபேரன் நிவேஸநத்தைக் காண்பாய்" என்று பிறந்தது. இந்த வ்ார்த்தைகளை விஸ்மயத்துடன் கேட்டார்கள். தௌம்யரும் தர்மராஜனுடன், "வடக்கே போக நம்மால் முடியாது; திரும்புவோம்." என்று சொன்னார். அதன்மேல் யாவரும் நரநாராயணாச்ரமத்துக்குத் திரும்பிப்போனார்கள்.

அவ்விடம் அவர் வாஸம்செய்துகொண்டிருக்கையில், ஜடாஸுர னெனும் ராக்ஷஸன் ப்ராஹ்மண வேஷம் பூண்டு பாண்டவருடன் சில காலமிருந்தான். கடோத்கசன் முதலான ராக்ஷஸர்கள் அவ்விடம் விட்டுப் போன பிறகு அவன் வந்து சேர்ந்தான். பீமஸேநன் வெளியில் போயிருந்த ஸமயம் பார்த்துப் பாண்டவர்களுடைய ஆயுதங்களை யெல்லாம் தன் வசப்படுத்திக்கொண்டான். தனது கோரரூபத்தைக் காட்டிக்கொண்டு, பாண்டவர்களையும் பாஞ்சாலியையும் தூக்கிக்கொண்டான். அவன் ஓட ஆரம்பிக்கவும், ஸஹதேவன் திமிறிக்கொண்டு, கத்தியைப் பிடுங்கிக்கொண்டு கீழே குதித்தான். பீமஸேநன் சென்ற திசையை நோக்கிக் கூவினான். தர்மபுத்ரரும் தமது யோக மஹிமையால் குருத்வத்தை அடையவும் ராக்ஷஸன் ஓட்டம் நின்றது. பீமஸேநன் இதற்குள் வந்து ராக்ஷஸனுடன் சண்டையிட்டான். அவர்கள் யுத்தம் வாலி ஸுக்ரீவர்கள் யுத்தம் போன்றிருந்தது. முடிவில் ராக்ஷஸன் கொல்லப்பட்டான்.

ஒரு நாள் யுதிஷ்டிரர் ப்ராதாக்களைப் பார்த்து "அர்ஜுநன் அஸ்த்ர ஸம்பாதந நிமித்தம் ஐந்து வர்ஷம் நம்மைப் பிரிந்து வஸிப்பதாய்ச் சொன்னானே. நாலு வர்ஷம் கழிந்து, ஐந்தாவதும் நடக்கின்றதே. தேவலோகத்தி னின்று அவன் இன்னும் திரும்பவில்லையே!" என்று சொன்னார்.

பிறகு கடோத்கசனை ஸ்மரித்து, அவன் ராக்ஷஸர்களோடு வந்தவுடன் யாவரும் உத்தர திசையை நோக்கி ப்ரயாணப்பட்

டார்கள். வழியில் கைலாஸத்தையும் மைநாக பர்வதத்தையும் ப்ºவேத பர்வதத்தையும் நோக்கிக்கொண்டு, கந்தமாதந பர்வதத்தின் தாழ்வரைகளில் ஸஞ்சரித்தார்கள். இப்படி ஏழு நாள் நடந்த பிறகு வ்ருஷபர்வாவினுடைய ஆப்ºரமத்தை அடைந்தார்கள். அங்கே தர்மாத்மாவான அந்த ராஜர்ஷியைக் கண்டு வணங்கினார்கள். அந்த ருஷியும் ஸந்தோஷத்துடன் ஏழுநாள் அவர்களைப் பூஜித்தார். எட்டாவது நாள் மறுபடி அங்குநின்று ப்ரயாணப்பட்டார்கள். தங்கள் ஆபரணங்களையும் ஸ்ரேஷ்டமான வஸ்த்ரங்களையும் பாண்டவர்கள் வ்ருஷபர்வாவினிடம் கொடுத்து, தம்முடன் வந்த சில ப்ராஹ்மணர்களையும் அவ்விடம் நிறுத்திவிட்டார்கள். மற்ற ப்ராஹ்மணருடன் உத்தரதிக்கை நோக்கிச் சென்றார்கள். வ்ருஷபர்வாவும் கொஞ்சம் தூரம் அவர்களுடன் சென்று வழிவிட்டார். அதன்மேல் மார்க்கத்தையும் விவரித்தார். பாண்டவர்களை ஆசீர்வதித்துத் திரும்பினார். அவர்கள் நாலாவது தினம் ப்ºவேதபர்வதத்தை அடைந்தார்கள் அதன்மேல் பல நதிகளைக்கடந்துகொண்டு மேன்மே லேறினார்கள். க்ரமேண மால்யவானெனும் கிரியை அடைந்தார்கள். அதன்பிறகு கந்தமாதந பர்வதத்தை யடைந்தார்கள். அது வித்யாதரர், கிந்நரர், கிம்புருஷர், ஸித்தர், சாரணர் இவர்கட்கு இருப்பிடம். நந்தநவநம் போன்ற வநங்களுடன் கூடினது. பல வ்ருக்ஷங்கள், மற்ற மஹாதருக்கள் அங்கே நிறைந்துள. பக்ஷிகளுடைய மநோஜ்ஞமான ப்ºப்தம் மிகுதியாய் அங்கே கேட்கப்பட்டது. பல திவ்ய தடாகங்கள் அங்கே காணப்பட்டன. இவற்றை யெல்லாம் கண்டு களித்துக்கொண்டு முடிவில் ஆர்ஷ்டிஷேணருடைய ஆப்ºரமத்தை அடைந்தனர். அங்கே அந்த ருஷியையும் கண்டார்கள்.

கண்டவுடன் பாண்டவர்களும் த்ரௌபதியும் ஸாஷ்டாங்கமாக அந்த ருஷியை நமஸ்கரித்து அபிவாதநம் செய்தார்கள். ருஷியும் அவர்களை குப்ºலப்ரப்ºநங்கள் கேட்டார். அப்படிச் செய்வதில், 'सत्यं वद धर्मं चर' என்றாரம்பிக்கின்ற ப்ºருதி வசநங்களை யொட்டி, "नानृते [illegible] ।

[illegible] । [illegible]

கூரொஷெஹாவம் வாயுவாவெ ஷகூஸ । ” என்று ஆரம்பித்து விசாரித்தனர். தர்மபுத்ரரும் ப்ரத்யுத்தரமாக ருஷி சொல்லிய தர்மநிச்சயங்களை யதாஶக்தி யதாந்யாயம் அநுஷ்டிப்பதாகச் சொன்னார். பிறகு ருஷி, ஆகாச ஸஞ்சார ஸமர்த்தர்களான ருஷிகள், பரஸ்பர காமயுக்தர்களான கிம்புருஷர்கள், நிர்மலமான வெண்பட்டாடைகள் உடுத்திய கந்தர்வ கணங்கள், அப்ஸரஸ்ஸுகள், அழகுடையவர்களும் மாலையணிந்தவர்களுமான வித்யாதரர்கள் இவர்கள் ஸந்நிஹிதங்களான பர்வத சிகரங்கள்மீது காணப்படுவார்கள் என்று சொன்னார். விசேஷ காநங்கள் கேட்கப்படு மென்றார். ஆனால் அதற்குமேல் மநுஷ்ய ஸஞ்சாரம் கூடாதென்றும் சொன்னார். சபலத்தால் அவ்விடம் நின்று மலையேறியவர்களை ராக்ஷஸாதிகள் அடிப்பார்க ளென்பதையும் தெரிவித்தார். அம்மலையின் சிகரத்தில் குபேரனுடைய உத்யாநம் இருப்பதென்றும், அவ்விடம் அப்ஸரஸ்ஸுகள் சூழ்ந்துவர வைச்ரவணன் ஸர்வபூதங்களுக்கும் தர்சந மளிப்பனென்றும், அத்தர்சநம் பாண்டவர்க்கும் கிடைக்கு மென்றும் சொல்லி முநிகள் புஜிக்கத்தக்க ரஸத்துடன் கூடிய பலங்களை உண்டு, அர்ஜுநன் வருமளவும் பாண்டவர் அங்கிருக்கலா மென்றும் ருஷி மொழிந்தார்.

பாண்டவர்களும் ருஷி மொழிந்தவற்றை மறவாமல் அவ்வாச்ரமத்தில் வாஸம் செய்தார்கள். கடோத்கசன் முதலான ராக்ஷஸர்கள் விடைபெற்றுச் சென்றனர். பல ருஷிகள் பாண்டவர்களைக் காண அவ்விடம் வந்தனர். அவர்களுடன் தர்மராஜ ப்ரப்ருதிகள் பல கதைகளைப்பற்றி வார்த்தை சொல்லிக்கொண்டு காலம் போக்கினார்கள். ஒரு நாள் ஸுபர்ணன் ஒரு மஹாநாகத்தைப் பிடித்துக்கொண்டார். அப்போது மலை கம்பித்தது; வ்ருக்ஷங்கள் எரிந்துபோயின. இதை யாவரும் பார்த்துக்கொண்டிருக்கையில், மலையின் உச்சியினின்று காற்றானது, நல்ல வாஸனையுடன் கூடிய மாலைகள், பஞ்சவர்ணத்துடன் கூடிய திவ்வியமான புஷ்பங்கள் இவற்றைப் பாண்டவர் க்ருஷ்ணையுடன் நின்றிருந்த ஸ்தலத்தில் கொண்டு போட்டது. இவற்றைப் பார்த்தாள் த்ரௌபதி. “இவ்வகை மலர்கள் என் மநஸ்ஸைக் கவர்கின்றன. இவற்றால் நான் தேவபூஜை செய்ய இச்சிக்கின்றேன். உன் தோள்வலியால் ராக்ஷ

ஸர்கள் நாற்புறமும் ஓடிப்போவார்கள். ஆதலால் இம்மலையேறி அவர்களைத் துரத்தியடித்து, எனக்கு இவ்வகை மலர்களை ஏராளமாகக் கொண்டுவந்து கொடு'' என்று பீமஸேனனை ஏவினாள். இதைக் கேட்டவுடன் பீமஸேனன் ஸர்வாயுதங்களையும் கைக்கொண்டு மலைமீதேறினான். அங்கிருந்த யாவரையும் விரட்டினான். குபேரன் வாஸஸ்தானத்தை நோக்கினான். வெண் ஸ்படிகக் கற்களாலும் ஸ்வர்ணத்தாலும் நிர்மிதமான பஹு மாளிகைகளைக் கண்ணுற்றான். அவற்றின்மேல் நாட்டப்பட்ட கொடிகள் காற்றினாலசைக்கப்பட்டுப் பறந்தன. இவற்றையெல்லாம் கண்டு பீமன் ஸங்கமெடுத்து ஊதினான். உடனே யக்ஷராக்ஷஸ கந்தர்வர்கள் அவனிடம் ஓடிவந்தார்கள். தமது ஆயுதங்களை அவன் மேலெறிந்தார்கள். வில்லெடுத்துச் சரங்களைத் துரந்தும், கதையை ப்ரயோகித்தும், அவர்கள் யாவரையும் பீமஸேனன் முறியடித்தான். அவர்கள் உடம்பெலாம் நோக ஆர்த்தஸ்வரம் செய்தார்கள். உடனே குபேரன் ஸகாவான மணிமான் எனும் ராக்ஷஸன் சூலத்தையும் கதையையும் எடுத்துக்கொண்டு, ஓடிப்போகும் ராக்ஷஸர்களை மடக்கிப் பீமனுடன் சண்டைசெய்ய வந்தான். இருவர்க்கும் யுத்தமுண்டாய் முடிவில் மணிமான் பீமஸேனன் கதையால் உயிரிழந்தனன். மற்ற ராக்ஷஸர்கள் கீழ்த்திசையை நோக்கி ஓடினார்கள்.

இச்சண்டையின் அரவத்தைக் கீழே பாண்டவர் கேட்டார்கள். பீமஸேனன் ஸமீபத்திலில்லை யென்பதையும் கண்டுகொண்டார்கள். த்ரௌபதியை ஆர்ஷ்டிஷேணரிடம் ஒப்பிவித்துவிட்டு அவர்கள் மலையேறினார்கள். ஆயுதபாணியாய் நின்ற பீமனையும், உயிரிழந்த ராக்ஷஸர் சரீரங்களையும் பார்த்தார்கள். குபேரன் பவநத்தையும் நோக்கினார்கள். தர்மபுத்ரர் பீமனை ஆலிங்கநம் செய்துகொண்டு 'பீமா! இப்பாபத்தொழிலை ஸாஹஸத்தாலோ மோஹத்தாலோ செய்தாய். த்ரிதசர்களுக்கு நீ அப்ரியம் புரிந்தாய். தர்மத்தைத் துறந்து பாபம் ஆசரிப்பவன் பாப பலத்தை அநுபவிப்பன். இவ்வண்ணம் நீ இனி நடவாதே'' என்று சொன்னார்.

ராக்ஷஸர்கள் பீமனிடம் அடிபட்டு ஓடிக் குபேரனிடம் நடந்ததைச் சொன்னார்கள். பீமனுடைய இந்த இரண்டாவது அபராத

த்தை வைப்ரவணன் கேட்டுக் கோபித்தனர். ரதத்தை ஆயத்தம் செய்யச் சொன்னுர். யுத்தஸந்நாஹத்துடன் போர்வீரரால் சூழப்பட்டுப் பாண்டவர் இருந்தவிடம் வந்து சேர்ந்தார்.

பாண்டவர்கள் ராஜாதிராஜனை ஸந்தோஷத்துடன் கண்டார்கள். அவரும் இவர்களை ப்ரியத்துடன் வீக்ஷித்தார். இந்த நரப்ரேஷ்டர்கள் தேவகார்யம் செய்கின்றவர்கள் என்று யோசித்தார். தர்மபுத்ரரும் நகுல ஸஹதேவர்களும் யக்ஷராஜனிடம் சென்று தண்டன் ஸமர்ப்பித்துத் தாங்கள் செய்த அபராதத்தை அறிந்தவர்கள்போல் அஞ்சலிபத்தராய் நின்ருர்கள். பீமஸேநனே பொன்மாலை யொன்றைத் தலையில் அணிந்துகொண்டு தானிருந்தவிடத்தில் நின்றுகொண்டே குபேரனைப் பார்த்தான். அவனுக்குப் பயமில்லை; சரீரப்ரமுமில்லை. அப்படி நின்றவனைப் பார்த்துக்கொண்டு குபேரன் யுதிஷ்டிரருடன் இவ்வண்ணம் ஸம்பாஷித்தார்.

“பார்த்த! நீ ஸர்வபூதங்கட்கும் ஹிதம் செய்பவனென்று யாவர்க்கும் தெரியும். ப்ராதாக்களுடன் நிர்ப்பயமாய் இம்மலையின்கண் வஸிப்பாய். பீமஸேநனிடம் கோபம் செய்யவேண்டாம். அவன் ஸாஹஸம் செய்தான். ஆயினும் அதற்காக அவன் வெட்கப்படவேண்டாம். இறந்தவர்கள் தாம் ஸம்பாதித்த பாபத்தால் இறந்தார்கள். தேவர்க்கு இது முன்பே தெரியும்” என்று இவ்வண்ணம் மொழிந்தார். பீமஸேநனுடனும் அவ்வண்ணம் குபேரன் வார்த்தை சொன்னுர். அதன்மேல் பீமஸேநன் ஆயுதங்களை வைத்துவிட்டுவந்து குபேரனை வணங்கினுன். குபேரனும், “சத்ருக்களுடைய மானத்தைப் போக்குகின்றவனுயும் ஸுஹ்ருத்துக்களுடைய ஆநந்தத்தை வ்ருத்தி பண்ணுகின்றவனுயும் இரு” என்று அவனை ஆசிர்வதித்தார். பிறகு, “ருஜுமார்க்கத்தை அநுஷ்டிப்பீர்கள். கோண வழியில் நடக்கவேண்டாம். ஸத்யமே சொல்லுங்கள்; பொய்யை ஸ்மரிக்க வேண்டாம். தீர்க்கமாய் யோசியுங்கள். பரத்திலே புத்தியைச் செலுத்துங்கள். இங்கே நீங்கள் ஸுகமாய் வாஸம் செய்யலாம். உங்களுடைய இஷ்டத்தை யக்ஷர்கள் தடுக்கமாட்டார்கள். இந்த்ரனிடம் ஸர்வாஸ்த்ரங்களையும் ஸம்பாதித்துக்கொண்டு அவரிடம் விடைபெற்று அர்ஜுநன் சீக்ரமாக உங்களிடம் வந்து சேர்வான்” என்று சொல்லிக் குபே

ரன் பரிவாரங்களுடன் திரும்பிச் சென்றார். பாண்டவர்களும் தம்முடைய வாஸஸ்தலத்தை அடைந்தார்கள்.

மறுநாள் காலையில் தௌம்யரும் ஆர்ஷ்டிஷேணரும் ஆஹ்நிக க்ரியைகளை முடித்துக்கொண்டு பாண்டவர்களுடைய வாஸஸ்தாநத்துக்கு வந்தார்கள். பாண்டவர்கள் அவர்களுக்கு நமஸ்காராபிவாதநங்கள் செய்தார்கள். பிறகு ஆர்ஷ்டிஷேணர் தர்மபுத்ரரைத் தன் புத்ரன்போல் பாவித்து ஆலிங்கநம் செய்துகொண்டு சொல்ல ஆரம்பித்தார்.

“இதோ கிழக்கே கடல்வரையில் செல்லுகின்ற மந்தர பர்வதம் ப்ரகாசிக்கின்றது. இத்திசையை இந்த்ர வைஶ்ரவணர்கள் ரக்ஷிக்கின்றார்கள். ம்ருத ப்ராணிகளால் அடையப்பட்ட இத்தெற்கு திசையை யமன் ரக்ஷிக்கின்றார். இதோ மேற்கே தோன்றும் பர்வதத்தை அஸ்தகிரி யென்பார்கள். இந்தப் பர்வதத்தையும் ஸமுத்ரத்தையும் வருணன் ரக்ஷிக்கின்றார். இந்த வடதிக்கில் ப்ரஹ்மவித்துக்களுக்கு ப்ராப்ய பூமியான மேரு பர்வதம் ப்ரகாசிக்கின்றது. அங்கே ப்ராஹ்மணர்களுடன் ப்ரஜாபதி வீற்றிருக்கின்றார். ஸ்தாவர ஜங்கமங்களை அவர் ஸ்ருஷ்டிக்கின்றார். ப்ரஹ்மாவினுடைய மாநஸ புத்ரர்களான தக்ஷர் முதலானவர்களுடைய ஸ்தாநமும் மேரு பர்வதந்தான். ஸர்வ பூதங்கட்கும் ப்ரக்ருதிக்கும் உபாதாந நிமித்த காரணமாகப் பெரியோர் எதைச் சொல்கின்றனரோ, ஆத்யந்த ரஹிதனும், பரஶ்வதனும், ஸர்வத்ர ப்ரகாசிக்கின்றவனும், ஸர்வேஶ்வரனும், ஸர்வோத்க்ருஷ்டனுமான நாராயணனுடைய ப்ராக்ருத வைகுண்டமெனும் அந்த ஸ்தாநமானது, ப்ரஹ்மாவினுடைய ஸ்தாநத்துக்கும் மேற்பட்டதாய் மேரு பர்வதத்தின் கிழக்கே ப்ரகாசிக்கின்றது. மஹா ப்ரகாசத்துடன் கூடிய அந்த மங்களகரமான ஸ்தாநத்தைத் தேவர்களும் தர்சிக்க அர்ஹரல்லர். அக்நி ஸூர்யன் முதலானோர் அங்கே ப்ரகாசிப்பதில்லை. அந்த ஸ்தாநம் ஸ்வயம் ப்ரகாசம். யதிகளால் அது ப்ராப்யம். ப்ரஹ்மர்ஷிகள் மஹர்ஷிகள் அவ்விடம் போகமாட்டார். பரமமான தபஸ்ஸைச் செய்து, சுப கர்மங்களுடன்கூடி, அஜ்ஞாநம் நீங்கி, யோகஸித்தி யடைந்த மஹாத்மாக்கள் அங்கே சென்று மறுபடி ஜந்மமெடுக்கமாட்டார்கள். ஓ யுதிஷ்டிர! இங்கிருந்து அந்த ஸ்தாநத்தை நமஸ்காரம் செய். இந்த மேரு பர்வதத்தைத்

தினந்தோறும் ஸூர்யன் ப்ரதக்ஷிணம் செய்கின்றார். சந்த்ரனும் இதை மாஸத்துக் கொருதரம் ப்ரதக்ஷிணம் செய்கின்றார்." என்றிவ்வண்ணம் ஆர்ஷ்டிஷேணர் ஸம்பாஷித்தனர்.

இவ்விதம் அர்ஜுநன் வரவை எதிர்பார்த்துக்கொண்டு பாண்டவர் அங்கே வஸித்தனர். அவர்கள் மநஸ்ஸுகள் அவ்விடத்தில் மிகுந்த தெளிவை அடைந்தன. "ஸ்வாத்யாயவந்தஸ் ஸததம் க்ரியாபராஸ்ச ஸ்வதர்ம்யா நாஸ்ச ஸுவிஷ்ணுதாஸ்ச । ஸமித்யதாஸ்தஸ்ய ஹோமயஸ்ய ஸத்ருவ்ய கஸ்யா மஹேந்த்ர தீக்ஷா: ॥ த்ருஷ்ட்வா விசித்ராணி கிரேர்வநாநி கிரீடிநம் சிந்தயதாம் ஸுகஷ்டம் । ஸமாப்யவஸ்தஸ்ய திஷ்டுவஸஸ்து தேஷாம் ஸம்வத்ஸரேணைவ ஸமா நராத்ய: ॥ ததஸ்ஸுதாவிசுஹரிஸம்ப்ரயுக்தம் மேகௌக்ரவா ஹம் ஸஹஸோபயாதம் । வித்யுச்சப்ரஹம் ப்ரேக்ஷ்ய நரேஷு முக்யா: ஹர்ஷாத் ப்ரஜூம்பநம் சிந்தயதாம் ஸமாத்ய ॥ ஸமாப்ய ஸுதாஸ்ரக்வி கிரீடி ஸ்ரக்வீ வராண்யாபரணாநி பிப்ரச் । தநஞ்ஜயோ வஜ்ரதரப்ரபாவ: ஸ்ரியா ஜ்வலம் பர்வதமாஜகாம ॥" என்கிறபடியே, ஸத்யப்ரதாநராயும் ஸத்கர்ம நிரதராயும் அர்ஜுநன் ஸமாகமத்தை ப்ரதீக்ஷித்துக்கொண்டிருந்த பாண்டவர்க்குப் பர்வதங்கள் மத்யே ரம்ய ப்ரதேசங்களின் காட்சியானது இடைவிடாது ஸம்பவித்திருந்தபோதிலும், ஒவ்வொரு நாளும் வர்ஷம்போல் நீண்டது. இப்படியிருக்கையில், இந்த்ர ரதமானது மின்னலென ஆகாசத்தில் ப்ரகாசிக்க அவர்கள் கண்டு களிப்புற்றனர். அதில் கிரீடியானவன் திவ்யாபரணங்களையும் திவ்ய மாலையையும் தரித்தவனாய்க்கொண்டு காணப்பட்டான்; பாண்டவர் நிற்கும் பர்வதத்தை அடைந்தான்; இறங்கினான்; தௌம்யர் பாதத்தை வணங்கினான்; பிறகு அஜாதசத்ரு, வ்ருகோதரன் இவர்கள் பாதங்களில் நமஸ்காரம் செய்தான்; நகுல ஸஹதேவர்கள் அவனை வணங்கினார்கள்; க்ருஷ்ணையினிடம் போய் உபசாரோக்திகள் சொன்னான். இவ்வண்ணம் அவர்கட்குள் பரமஹர்ஷம் உண்டாயது. பிறகு அவர்கள் இந்த்ர ரதத்தை ப்ரதக்ஷிணம்

செய்தார்கள். இந்த்ரனுக்குப்போல் மாதலிக்கு ஸத்காரம் செய்தார்கள். மாதலியும் அவர்களை ஆசீர்வதித்து ரதத்துடன் சென்றனன்.

பிறகு அர்ஜுநன் பகரனால் தனக்குக் கொடுக்கப்பட்ட நகங்கள் திவ்யாபரணங்கள் முதலானவற்றைத் தன் தேஹத்தினின்று கழற்றிப் பாஞ்சாலியிடம் கொடுத்தான். பிறகு ஸஹோதரர்களையும் ப்ராஹ்மணர்களையும் தன்னைச் சுற்றி உட்காரவைத்துக் கொண்டு தன்னுடைய கதை முழுதும் சொன்னான்.

மறுநாள் பரிவாரத்துடன் தேவ்ராஜன் பாண்டவர்களைப் பார்க்க வந்தார். ரதத்தினின்று இறங்கிவந்த இந்த்ரனைத் தர்மபுத்ரர் விதிப்படி பூஜித்தார். அர்ஜுநன் பிதாவை வணங்கி அவர் பக்கத்தில் நின்றான். இந்த்ரன் தர்மபுத்ரரைப் பார்த்து, "கௌந்தேய! உனக்கு மங்களம் உண்டாகும். நீ ராஜ்யத்தை அடைந்து பூமி யாள்வாய்; திரும்பிக் காம்யக வநத்துக்குச் செல். என்னிடம் தநஞ்சயன் எல்லா அஸ்த்ரங்களையும் பெற்றான். மூன்று லோகத்திலும் அவனை ஜயிப்பவர் இல்லை" என்று சொல்லிவிட்டு ஸ்வர்க்கம் சென்றனர்.

தர்மபுத்ரர் அர்ஜுநனை நோக்கி, "தநஞ்ஜய! தெய்வாநுகூலத்தால் ஸர்வாஸ்த்ரங்களையும் நீ யடைந்தாய்; தேவராஜனை ஆராதித்தாய்; பார்வதியும் சிவனும் உன்னால் ஸாக்ஷாத்தாகத் தர்சிக்கப்பட்டார்கள்; லோக பாலர்கள் தர்சநம் உனக்குக் கிடைத்தது; மறுபடி திரும்பி எங்களுடன் சேர்ந்தாய்; இப்போது இந்த பூமி முழுதும் உன்னால் நான் அடையப்போவதை நிச்சயிக்கின்றேன்; த்ருதராஷ்ட்ர புத்ரர் என் வசமாவதையும் பார்க்கின்றேன்" என்றனர்.

மறுநாள் அவர் கேட்டபடி அர்ஜுநன் அவர்க்குத் தான் ஸம்பாதித்த திவ்யாஸ்த்ரங்களைக் காட்டினான்.

அர்ஜுநன் வருமுன் இரண்டு வர்ஷமும், வந்து சேர்ந்தபின் நாலு வர்ஷமும், பாண்டவர்கள் வைச்ரவணன் ப்ரதேசத்தில்

ஸுகமாய் வஸித்தார்கள். பிறகு அந்த ரமணீயஸ்தலத்தை விட்டுப்போக இஷ்டமற்றவராய், வநவாஸம் பதினொன்ருவது வருஷம் நடப்பதை யோசித்துத் திரும்பிப்போக ஆரம்பித்தனர். ஆர்ஷ்டிஷேண்ரிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டார்கள்.

“ ததஸ்துதே தேஷாம்வாநரேவஹர்ஷாத் கைலாஸமாலோக்யானுபஸ்யவ । ஸுவர்ணாம் தம்ஸ தஷ்டிஹாணாம் ஹீயாம்வாஸியாவ்யகாஸம் ॥ * * தேதேஉத்தராவாஸம் வஹாயா நிரஷ்டவ்யதீத்ய கைலாஸவிம்த்யாவம் । ஸுவேஷா த்யேநாரம் தேதஸ்ராஹ்ரம் வ்ருஷபர்வணாஸ்ரமே” ॥ என்கிறபடியே, தாங்கள் அதுவரையில் வஸித்த கைலாஸ பர்வதத்தைப் பார்த்துக்கொண்டு, அதைக் கடந்து வ்ருஷபர்வாவினுடைய ஆப்ரமம் வந்து சேர்ந்தனர். அங்கொரு நாளிருந்து புறப்பட்டார்கள். மறுபடியும் நர நாராயணுப்ரமத்துக்கு வந்தார்கள். அங்கொரு மாஸம் இருந்துவிட்டு இறங்கினுர்கள். பிறகு கிராதராஜனை ஸுபாஹுவின் நாட்டை யடைந்து அவனுல் பூஜிக்கப்பட்டார்கள். அதையும் விட்டு த்வைத வநம் வந்து சேர்ந்தார்கள். முடிவில் காம்யக வநத்தையும் அடைந்தனர்.

இக்கதைகளை யோசிக்குமிடத்து, பதர்யாப்ரமம் மாநஸரோவரம் கைலாஸம் இவற்ருல் ப்ரஸித்தியடைந்த ஹிமவத் ப்ரதேசமானது, விவிக்த ஸேவிகளான விப்ரவர்யர்களாலும், ராஜர்ஷிகளாலும், மஹா பாரதகாலத்திலும், அதற்கு முன்பட்டும், பின்பட்டும், தபஸ்ஸின் பொருட்டும், யோகஸித்தியின் பொருட்டும் ஆப்ரயிக்கப்பட்டதென்று நிச்சயிக்கக்கூடும். நாம் எடுத்துக் காட்டிய இதிஹாஸ ப்ரகரணங்களில் அந்த ஸ்தலங்கள் பலத்ருமங்களாலும், புஷ்ப வ்ருக்ஷங்களாலும், உயர்ந்து மகன்றும் நின்ற இதர மரங்களாலும் வ்யாப்தமாயிருந்தனவாகத் தெரிகின்றன. இப்படி அடர்ந்த வநப்ரதேசங்களில் பல அழகான பக்ஷிகள் செவிகளுக்கு இனிய சப்தங்களைச் செய்தனவாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் மலைகளின் குஹைகளில் காட்டு ம்ருங்க

கள் மிகுதியாகக் குடிகொண்டு மிருந்தனபோலும்! இந்த ஸ்திதிகள் அப்ரதேசங்களில் இப்போது நிலை பெறுகின்றனவோ வென்பதை நாமறியோம். கேள்விப்பட்டவரையில் அவை அங்ஙனம் இல்லைபோல் தோன்றுகின்றது. இது காலவைகுண்யத்தால் ஏற்பட்டிருக்கலாம். இதிஹாஸம் எழுதப்பட்ட காலங்களில், இக்காலங்களில்போல், ஹிமவத் ப்ரதேசங்கள், ஆர்யா வர்த்தத்தினின்று யாத்ரையாகச் சென்ற ஜநஸஞ்சாரமுள்ளனவாகத்தான் இருக்கவேண்டும். ஆதலால் இதிஹாஸங்களில் காணப்பட்ட ஸ்தல விவரணத்தைக் கேவலம் கவியினுடைய உத்ப்ரேக்ஷையாகக் கொள்ளுதல் கஷ்டம். இன்னும் யக்ஷ ராக்ஷஸ வித்யாதர அப்ஸரஸ்ஸுகள் முதலான ஜநங்களால் அப்ரதேசம் பஹுமாநிக்கப்பட்டதாகவும் இதிஹாஸம் காட்டுகின்றது. அந்த ஜநங்கட்குத் தத்கால ப்ரதிநிதிகள் யாவரோ நாம் கண்டிலோம். டிபட் தேசவாஸிகள், சீனதேசத்தார், மங்கோலியா ப்ரதேசத்தார், துர்க்கி ஸ்தாநமென்று பேர் வழங்கும் நாட்டினர்கள், இவர்கள் கந்தர்வ யக்ஷ கிந்நராதி நாமங்களால் முன் ப்ரஸித்தியடைந்த ஜநங்களின் ஸந்ததிகளா யிருக்கலாம். நாகர் எனும் ஜாதியார் வட இந்தியாவின் வாஸிகளுக்குள் மறைந்துபோயிருக்கவேண்டும்.

தேவதைகள் தத்காலம் தேவாலயங்களில் ஸாந்நித்யம் செய்கின்றூர்களென ஜநங்கள் நம்புகின்றனர். கர்மகாண்ட க்ரியைகளாலும் ஸ்தோத்ரங்களாலும் ஆராதிதர்களான இந்த்ராதி தேவர்கள், ஹிமாசலத்தில் அவ்வவர்க்குரிய ப்ரதேச விசேஷங்களில் முன் ஸாந்நித்யம் செய்திருக்கவேண்டும். கைலாஸம் மஹாதேவன் உகந்தருளிய ப்ரதேசம். ஜகதந்தராத்மாவான நாராயணன் ஓர் அவதார விசேஷத்தால் அநுக்ரஹித்த ஸ்தலம் பதர்யாச்ரமம். இப்படிப்பட்ட புண்ய ப்ரதேசங்கள் நமக்கு இப்போது கதாசேஷங்களாக நிலைத்துவிட்டன.

பத்ராதிபர்.

# உபோத்காதாதிகார சிந்தனை.

குருபரம்பரா ஸாரத்தில் விசேஷமாக ப்ரதிபாதிக்கப்பட்ட குருபரம்பராநுஸந்தாநத்தை உபோத்காதாதிகாரத்தில் மீண்டும் ஓர் ச்லோகத்தால் செய்தருளுகின்றார் (1). அந்தப் பரம்பரை தேசிகனுடைய ஆசார்யன் முதல் பகவத் பர்யந்தமாக விஸ்தரித்து நிற்கின்றது; பல கல்யாண குணங்களால் ப்ரஸித்தமானது; ஸகல நிஷித்த குணங்களு மற்றது. ஆதலால் அவ்வாசார்ய பரம்பரையில் ஒவ்வொரு ஆசார்யனும் பகவானைப்போல் அகிலஹேய ப்ரத்யநீக கல்யாணகுணைகதாநர் என்று ஏற்படுகின்றது. பகவானையும் ஆசார்யர்களையும் சேர்த்து இவ்வண்ணம் ஸ்மரிப்பதால் அவர் எல்லோர்க்கும் பகவத் ஸாம்யம் சொல்லப்பட்டது. இப்படிப்பட்ட ஆசார்ய ஸந்ததியை வந்தநம் செய்கின்றார். ஏனென்றால், அவர்கள் செய்தருளின மஹோபகாரமின்றித் தமக்கு க்ரந்தாரம்பமே ஸம்பவித்திராது என்பது திருவுள்ளம். அவர்களுடைய ப்ரஸாதத்தால், தம்முடைய மநஸ்ஸில், ரஹஸ்ய த்ரயங்களென்னும் மஹாமந்த்ரங்களுடைய ஸாரார்த்தங்கள் ஸ்திரமாக ப்ரகாசிப்பனவாய் ஸாதித்தருளுகின்றார். "என்னுடைய ஆசார்யன் முதற்கொண்டு பகவத் பர்யந்தமாகக் குணங்களால் ப்ரஸித்தமானதும் ஹேயகுணங்க ளற்றதுமான ஆசார்ய பரம்பரையை வந்தநம் செய்கின்றேன். யாதொரு பரம்பரையினுடைய க்ருபையினால் ரஹஸ்த்ரயங்களுடைய ஸாரபூதமான இவ்வர்த்தங்கள் என்னுடைய மநஸ்ஸில் ஸ்திரமாக ப்ரகாசிக்கின்றனவோ" என்பது ச்லோகார்த்தம்.

க்ரந்தாரம்பத்தில் இவ்வண்ணம் குருவந்தந மூலமாக மங்களாசரணம் செய்து, தாம் சொல்லப்போகின்ற அர்த்தங்கள் ஸாம்ப்ரதாயிக மென்றும் ஸூசிப்பித்தார்.

---

(1) 𑌆𑌭𑌗𑌵𑌤𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌥𑌿𑌤𑌾𑌂 𑌅𑌨𑌘𑌾𑌂 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌸𑌂𑌤𑌤𑌿𑌂 𑌵𑌂𑌦𑍇 ।
𑌮𑌨𑌸𑌿 𑌮𑌮 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾𑌤𑍍 𑌵𑌸𑌤𑌿 𑌰𑌹𑌸𑍍𑌯𑌤𑍍𑌰𑌯𑌸𑍍𑌯 𑌸𑌾𑌰𑍋𑌽𑌯𑌮𑍍 ॥

இதன் பிறகு, பேரருளாளன் கைங்கர்யத்தில் மிக்வும் ஈடுபட்டவர்களும், தமக்கு அத்யாத்ம வித்யாப்ரதாநம் பண்ணித் தம்மைப் பகவானுடைய திருவடிகளிலே சேர்ப்பித்தவருமாகிய ஸந்நிஹித ஆசார்யனுடைய வந்தநத்தைத் தனியே செய்கின்றார் (1). அவர் எப்படிப்பட்டவர் என்றால்: 'கர்மப்ரதாநமாயும் ப்ரஹ்மப்ரதாநமாயும் இருக்கின்ற பூர்வோத்தர மீமாம்ஸா ஶாஸ்த்ரங்களில் குதஃ குதஃ என்று ஆக்ஷேபங்களை உத்ப்ரேக்ஷிக்கும் வாதிகளுடைய குதர்க்கங்களை நிரஸித்தவர்' என்கின்றார். ஸ்வ க்ரந்தத்தினுடைய முதலாவது இரண்டாவது பாகங்களுள் அர்த்தங்களின் அநுஸந்தாநத்தையும் அவற்றின் ஸ்திரீகரணத்தையும் செய்வதால், தமக்குக் கர்மப்ரஹ்ம விஷயத்தில் அநுஶாஸநமும் குதர்க்க மூலங்களான விவித வ்யாமோஹங்களின் ஶமநத்தால் அதனுடைய ஸ்திரீகரணமும் செய்யும்படி, அந்த ஶாஸ்த்ரங்களைத் தம்முடைய ஆசார்யர்கள் உபதேசித்தவர்கள் என்று ஸூசிப்பிக்கிறார். 'வீதீஶோதக கிங்கராந்' என்பதால் 'வீதியில் செத்தைகள் போக்குவதைப்போல் தம்முடைய ஆசார்யர் விரோதி நிரஸநத்தை அநாயாஸமாகப் பண்ணினவர்' என்றும், 'விரோதிகளும் அவர்கள் செய்த வாதங்களும் அவர்க்கு த்ருண ப்ராயமாயிருந்தன' வென்றும் காட்டுகின்றார். 'வீதீஶோதக கிங்கரர்' என்பதால், 'திருப்பணி செய்வார் ஒருவர் தேசிகனுக்குத் திருவாய்மொழியும் சில அர்த்த விஶேஷங்களும் ப்ரஸாதித்தார்' என்று ப்ரஸித்தி யிருந்தபடியால், அப்பதங்கள் அவர் விஷய மென்று சொல்வாரு முளர். 'கௌதஸ்குத நிவர்தகர் தாமே வீதீஶோதக கிங்கரர்' என்று ஶ்லோக தாத்பர்ய மாதலால், திருவாய்மொழி சொன்னவர் உபய மீமாம்ஸா ஶாஸ்த்ரங்களிலும் விரோதி நிரஸநம் செய்தவரென்று ப்ரஸித்தியில்லாதபடியால், மேல்சொன்ன யோசனை பொருந்தியதன்று. ஆனால், அப்புள்ளார் ப்ரப்ருதிகளுக்கு ஹஸ்திகிரீஶனுடைய வீதீஶோதக கிங்கரத்வம் பொருந்துமோ? எனக்கூடும். பகவான் ஜீவகோடிகளிடம் அநுகம்பையை வஹித்துத் திருவீதி யலங்கரிக்கின்றான். அம்ருத ப்ரதனான

(1) கர்மப்ரஹ்மாத்மகே ஶாஸ்த்ரே கௌதஸ்குத நிவர்தகாந் ।
வந்தே ஹஸ்திகிரீஶஸ்ய வீதீஶோதக கிங்கராந் ॥

பரமபுருஷன், அசித்கல்பர்களாய்ப் ப்ரளயத்தில் மூழ்கிக் கிடக்கும் ஜந்துக்களிடம் க்ருபைகூர்ந்து, அவர்களுக்குக் கரண களேபரங்களைத் தருவதற்காக ஸ்வஸ்வரூபத்தை அதிக்ரமித்து ப்ரபஞ்ச ரூபத்தைத் தரிக்கின்றானென்று வேதம் சொல்லிற்று. "[illegible]" என்று ஸ்ரீ பாகவதத்தில் சொன்னபடி, ஸர்வேச்வரன், தன்னால் ஸ்ருஷ்டிக்கப்பட்டுப் பரிணமித்த ப்ரக்ருதி விகாரங்களில் அநுப்ரவேசம் செய்து, ஸத் அஸத் விபாகமும் நாமரூப வ்யாகரணமும் செய்தான். இவ்வண்ணம் புருஷத்வ மடைந்த ஜீவகோடிகள் சாஸ்த்ர மில்லாவிட்டால், அவ்வவர்க்குரிய தர்மங்களையும் தத்வார்த்தங்களையும் அறிந்து, சதுர்வித புருஷார்த்தங்களையும் ஸம்பாதித்துக்கொள்ள மாட்டார்கள். ஆகையால் ஸர்வ புருஷார்த்த ப்ரதமும், கர்மகாண்டம் ப்ரஹ்ம காண்டமென்னும் இருபிரிவுடன் கூடினதுமான வேதமென்கிற சாஸ்த்ரத்தையும் சதுர்முகாதிகளைக்கொண்டு ப்ரவர்த்திப்பித்தான். பெருமாள் வீதிகளில் எழுந்தருளும்போதும், அர்த்த காமங்களால் அபஹரிக்கப்பட்ட சித்தமுடையோர்க்கு அவனுடைய தர்சநம் ப்ராயேண பயன்படுவதில்லை. அவ்வண்ணமே சாஸ்த்ரமும் ஸகல புருஷார்த்தங்களையும் ப்ரதிபாதிக்கின்றபடியால், அதைப்படிப்போர்க்கெல்லாம் அதனுடைய முக்ய ப்ரயோஜநம் கைகூடாது. அதில் பரம புருஷார்த்தத்தைத் தரும் ப்ரஹ்ம ஜ்ஞாநத்தையும், அதற்கு ஸஹகாரியாயுள்ள கர்ம ஸ்வரூபத்தையும் முக்யமாகக் கடைப்பிடித்து, 'தத்கர்ம யந்ந பந்தாய ஸா வித்யா யா விமுக்தயே' [எது பந்தத்தின் பொருட்டாகாதோ அது கர்மம்; எது முக்தியின் பொருட்டு உதவுமோ அது வித்யை.] எனும்படியே, குவாஸனைகளில் மேலிட்டவர்கள் குதர்க்கங்களாலும் துரூஹங்களாலும் சாஸ்த்ரங்களின் மேல் ஏற்றப்பட்ட விரோதங்களை நிரஸநம் பண்ணி, சாஸ்த்ரமாகிற வீதியை சோதித்துப் பகவானையும், அவன் ப்ராப்யனாகத் தக்க ஜ்ஞாநத்தையும், அவனை யடையத்தக்க உபாயத்தையும் கலக்கங்களறக் காட்டியருளினர் அப்புள்ளார் என்பது திருவுள்ளம்.

இங்கே ஹஸ்திகிரீசனை விசேஷித்து எடுத்தது ஏனென்றால்: பரமபுருஷன், தன்னுடைய பரத்வத்தையும், தனக்கும் ஜீவ

னுக்கும் உள்ள பேதத்தையும், தன்னை யடைவதற்கு உபாயமாக ப்ரபத்தியையும், இப்படி ஸம்ப்ரதாயத்தை முன் ஸ்தாபித்த நாத யாமுந முநிகள் பரம்பரையைச் சேர்ந்த மஹாபூர்ணனை ஆசார்யனாகவும், ஹஸ்திகிரீசனாய் நின்று ஸ்ரீ பாஷ்யகாரருக்குக் காட்டியருளினான். ஸ்ரீபாஷ்யகார ஸம்ப்ரதாயம் அப்புள்ளார் வழியாகத் தேசிகனுக்கு ப்ராப்தமாயிற்று. அப்புள்ளார் உள்ளத்தெழுதியதைத் தேசிகன் ஓலையிலிட்டனர். ஆதலால் தம்முடைய க்ரந்தம் அப்புள்ளார் செய்த உபதேசத்தை அநுஸரித்துப் பிறந்ததென்பது ச்லோக தாத்பர்யம்.

இனி ஒரு பாசுரத்தால், இந்த க்ரந்தாரம்பத்தைச் செய்யும்படித் தமக்கு வந்த பாக்ய விசேஷத்தை ஸாக்ஷாத்தாக வெளியிடுகின்றார் (1). எப்படியென்றால்:—நம்முடைய ஆசார்யர்கள் பத்மாஸஹாயனுடைய திருவடிகளை மோக்ஷோபாயமாக ஆச்ரயித்தவர்கள். அவ்வண்ணமே நாமும் ஆச்ரயித்தால் அவன் நம்மையும் அடைக்கலமாக ஆண்டுகொள்வன் [அதாவது, தன்னால் ரக்ஷிக்கப்பட வேண்டிய வஸ்துவாக நம்மையும் ஸ்வீகரிப்பன்] என்று நிச்சயித்து, அவர்களை ஆச்ரயித்த நமக்கும், அந்தப் பகவானுடைய பாதாரவிந்தங்களையே உபாயமாகக் காட்டிக்கொடுத்த பரமகாருணிகர்கள். அவர்கள், வ்ருத்தியடைகின்ற அஜ்ஞாநமெனும் இருளானது நிச்சேஷமாக நிவ்ருத்தமாகவேண்டுமென்கிற அபிநிவேசத்துடன் கூடினவர்களாய், ரஹஸ்யத்ரயங்களின் தாத்பர்யார்த்தங்களை நமக்கு உபதேசித்தவர்கள். இந்த ப்ரபஞ்சமோ அதன் வசமாகும் ஜநங்களுக்குப் பகவானுடைய ஸ்வரூப குணங்களையும், தம்முடைய நிஜஸ்வரூபத்தையும் எப்போதும் தெரியவொட்டாமல் மறைக்கின்றது. அப்படிப்பட்ட ஸம்ஸாரத்தின் மத்தியில் நிற்கின்ற நமக்கு, ஸர்வகாலங்களிலும் அந்த ரஹஸ்யத்ரயார்த்தங்களை அநுபவித்து ஆநந்திக்கவும், விலக்ஷணமான ஒரு பாக்ய விசேஷம் நம்முடைய ஆசார்யர்கள் க்ருபா வசத்தால் வந்து கிட்டுகின்றது. எப்படியென்றால்: 'இந்த ப்ரபந்த நிர்மாணத்

(1) ஆளுமடைக்கல மென்றெம்மை யம்புயத்தாள்கணவன்
தாளிணைசேர்ந்தெமக்கு மவைதந்த தகவுடையார்
மூளுமிருட்கள்விள்ள முயன்றோதிய மூன்றினுள்ளம்
நாளுமுகக்கவிங்கே நமக்கோர்விதி வாய்க்கின்றதே.

தால் அவ்வர்த்தங்களின் அநுஸந்தாந பரீவாஹ ரூபமாக ப்ரதி திநமும் அவற்றை அநுபவிக்கும்படியான பாக்யம் ஆசார்ய ப்ரஸாதத்தால் நமக்கு உண்டாகின்றது' என்று இவ்வண்ணம் பொருள் கொண்டது 'ஆளுமடைக்கலம்' என்னும் பாசுரம்.

இதனால், ஆரம்பிக்கப் போகின்ற க்ரந்தமானது ரஹஸ்யத்ரயார்த்த விவரண மென்றாகின்றது. இந்த ரஹஸ்யத்ரயத்தின் பத வாக்ய யோசனைகள் க்ரந்தத்தினுடைய மூன்றாவது பாகத்தின் விஷயமாகின்றன. ஸம்ப்ரதாய ப்ரக்ரியை நாலாவது பாக விஷயம். 'ரஹஸ்யத்ரயார்த்தங்களைத் தமக்கு ஆசார்யர்கள் உபதேசித்தார்கள்' என்கிறபடியால் ஆசார்ய க்ருத்யமும், 'தகவுடையார்' என்று அவர்களிடம் தம்முடைய க்ருதஜ்ஞதாநுஸந்தாநத்தாலும், அவர்களால் உபதிஷ்டார்த்தங்களை ப்ரதி திநமும் அநுஸந்திக்கவேண்டு மென்பதாலும் ஶிஷ்யக்ருத்யமும், இவ்விரண்டும் ஸம்ப்ரதாய ப்ரக்ரியை என்பது கருத்து. இது சதுர்த்த பாக விஷயம்.

'பகவானுடைய தாளிணையை ஶரணமாக ஆசார்யர்கள் ஆஶ்ரயித்தார்கள்' என்பதாலும், 'அத்திருவடிகளையே நமக்கும் அவர்கள் மோக்ஷோபாயமாக உபதேசித்தார்கள்' என்பதாலும், இக்ரந்தத்திற்குப் பரம ப்ரயோஜநம் வெளியிடப்பட்டதாயிற்று. அந்த உபாயாநுஷ்டாந தசையிலும் பரமபுருஷன் ரமாஸஹாயனாக நிற்கின்றான் என்பது ஸூசிதம்.

'மூளு மிருட்கள் விள்ள' என்பதால் ரஹஸ்யார்த்தங்களின் உபதேசம் அஜ்ஞாந நிவாரக மென்றும் ஸித்திக்கின்றது. ஆதலால் அஜ்ஞாந நிவ்ருத்தியும் ஸ்வக்ரந்தத்துக்கு ஓர் அவாந்தர ப்ரயோஜநம் என்று காட்டுகின்றார்.

உபோத்காதாதிகார விஷயத்தை 'ஶ்ரீவர' என்று ஒரு ஶ்லோகத்தால் ஸங்க்ரஹிக்கின்றார் (1). 'பகவான் வக்ஷஸ்தலத்

(1) [illegible]

தில் அணிகின்ற கௌஸ்துப மணிபோல், ஜீவனும் பரமபுருஷனுக்கு நித்ய ஹ்ருத்யன். அந்த த்ருஷ்டாந்தத்தால் ஜீவனும் கௌஸ்துப மணியைப்போல் நிர்மலனும் கல்யாணதமனும் பகவானுக்கு அதிசயத்தை உண்டுபண்ணுகின்றவனுமாய் நிற்கின்றான்' என்று ஏற்படுகின்றது. 'நித்ய ஹ்ருத்யன்' என்பதால் 'இவ்வாகாரங்கள் ஜீவனுக்கு ஸ்வாபாவிகம்' என்று ஸித்திக்கின்றது. கௌஸ்துபம் பகவானுக்கு ஹ்ருதயங்கமமா யிருப்பதுபோல் ஜீவனும் ஜ்ஞாநாநந்த பகவச்சேஷத்வ அபஹத பாப்மத்வாதி குணங்களால் பகவானுக்கு ஹ்ருதயங்கமன். இன்னும் ஹ்ருதய ஸமீபத்தில் பகவானால் தரிக்கப்பட்ட கௌஸ்துபம் ஜீவாபிமானி தத்வமாகையால், அதைப்போல் ஜீவனும் ஸர்வேச்வரனுக்கு ஹ்ருத்ய னென்று சொல்லலாம். அதாவது 'பகவானுடைய வக்ஷஸ்தலத்தில் இருப்பவன்' என்றர்த்தம். ஜீவனுக்கு ஸ்வபாவமாக ஏற்பட்டது கிங்கரத்வாதி ராஜ்யம். பகவானுக்கு நித்ய கைங்கர்யம் செய்வதை 'ஆதிராஜ்யம்' என்றார். ஏனென்றால், ஆதிராஜ்யம் எவ்வண்ணம் ஒருவனுக்கு இஷ்டமாகின்றதோ அவ்வண்ணமே சேஷவ்ருத்தியும் ஜீவனுக்கு மிகவும் ப்ரீதிவிஷயமாகத் தக்கது. அதுதான் அவனுக்கு மஹாபுருஷார்த்தம். இப்படி ஜீவனுக்கு ஸ்வபாவ ஸித்தமாயும், தாயதநம் போல் ப்ராப்தமாயும் இருக்கும் கைங்கர்யத்தை அவன் இழந்த காரணத்தை 'கூ-ஷிஉதிஃ' என்பதால் காட்டுகின்றார். அவனுடைய ஸ்வாபாவிகமான அஸங்குசித ஜ்ஞாநமானது அநாத்யவித்யையால் மறைக்கப்பட்டு ப்ரகாச மற்றிருப்பதால், அவித்யை யெனப்பட்ட அஜ்ஞாநப்ரேரிதனாக அவன் துஷ்கர்மங்கள் புரிகின்றான்; பகவானுடைய ஆஜ்ஞைகளை அதிலங்கநம் பண்ணுகின்றான். ஆதலால் பகவந்நிக்ரஹத்துக்கு விஷயமாகி, மேல்சொன்ன கைங்கர்யத்தை ஜீவன் இழந்துபோனான். அப்படிப்பட்டவனுக்கு, 'விபிவஸிண திமஹஷாஈ வீக்ஷிதஹெஸ கா‌ஸெ' என்று ஸாதித்த வண்ணம், அநாதியாக வ்ருத்தியாய் நின்ற அவனுடைய கர்மஸமூஹத்தில், அவனுக்கும் தெரியாததோர் ஸுக்ருத விசேஷமானது பலதசைக்கு வரும்படியான

அவஸ்தாவிசேஷத்தை அடைகின்றது. அதனால் ஒரு கால விசேஷத்தில் அவனுடைய ஜாயமாந தசையில் பகவானுடைய கடாக்ஷம் அவனுக்கு உண்டாகின்றது. இந்த க்ரமங்கள் ‘ஈச்வரஸ்ய ச ஸௌஹார்த்தம் யத்ருச்சா ஸுக்ருதம் ததா। விஷ்ணோ: கடாக்ஷம்’ என்று விவரிக்கப்பட்டன. ‘நித்ய ஹ்ருத்யன்’ என்பதால் ஈச்வரனுடைய ஸௌஹார்த்த மெனப்பட்ட ஸஹஜகாருண்யம் விவக்ஷிதம். அது ஜீவனுடைய பாப விசேஷங்களால் கார்யகர மாகாமல் நின்றது. அது அவனுக்கு அநுகூலமாகும் பொருட்டு, ‘விபிவஸிணதி ஜெஹாச’ என்கிறபடியே, அவனுடைய ஸுக்ருத விசேஷம் பலதசைக்கு வருகின்றதை ப்ரதீக்ஷிக்கின்ற தென்பது ஸூசிதம். அப்படிப்பட்டதோர் ஜந்மாரம்பத்தில் பகவானுடைய கடாக்ஷம் அவனுக்கு உண்டாகின்ற தென்று காட்டப்பட்டது. பிறகு மேல்சொன்ன ஸுக்ருதத்துக்குப் பரிபாக காலம் உண்டாம் போது, ஆசார்ய ப்ராப்தி நிமித்தமாக இதர ஹேதுக்கள் வந்து கூடுகின்றன. அவை “விஷ்ணோ: கடாக்ஷமத்வேஷ ஆபிமுக்யஞ்ச ஸாத்விகை: । ஸம்பாஷணம் ஷடேதானி ஹ்யாசார்ய ப்ராப்தி ஹேதவ: ॥” என்கிற ச்லோகத்தில் ஸங்க்ரஹிக்கப்பட்டன. இந்த க்ரமத்தில் பகவானுடைய ஜாயமாந கடாக்ஷம் நேரிட்ட ஜந்மத்தில், முதலில் பகவானிடம் அத்வேஷமும், பின்பு ஆபிமுக்யமும், அதன்பிறகு ஸாத்விகருடன் ஸம்பாஷணமும் உண்டாகின்றன வென்று சொல்லலாம். அத்வேஷமும், ஆபிமுக்யமும் ஸாத்விகர் விஷயமென்றாலும் பொருந்தும். இந்த யோசனைகளை யெல்லாம், ‘குரூபஸத்திஜம்’ என்று ஸங்க்ரஹித்தருளினர். ‘குருபரிஷத்’ என்பதால் ஸம்ப்ரதாயாகதமான குரூபதேசத்தைப் பெறுகின்றானென்பது திருவுள்ளம். ‘உபஜ்ஞம்’ என்பதால், ஜீவன் அடையப்போகின்ற ‘ஸ்வம்’ எனப்பட்ட ஸ்வஸ்வரூபம்’ [அதாவது ‘ஜ்ஞாநாநந்த பகவத் சேஷத்வங்களுடன் கூடிய ஆத்ம ஸ்வரூப ப்ராப்தியானது] ஆசார்யர்களுடைய பரம்பராகதமான உபதேசத்தை மூலமாகவுடையது என்பது அர்த்தம். ஏனென்றால் அவ்வாசார்யர்கள் இந்த ஆத்ம ஸ்வரூபத்தை முதலில் அறிந்த

வரும் ஸம்ப்ரதாய ப்ரதம ப்ரவர்த்தகர்களுமாய் இருக்கின்றார்கள். ஸ்வம்-பகவான் ஒருவனுக்கே ரேஷமாயும், அவனுக்கே பாரதந்த்ரமாயு மிருக்கும் தனது ஸ்வரூபத்தை, வ்ராவு) - அது அவ்வண்ண மிருக்கின்றதாக அறிந்து, மொவாயதி, ரக்ஷதி - அதாவது அஸ்வரூபத்தையும், அதற்கு உரித்தான கிங்கரத்வரூபமான ஆதிராஜ்யபத்தையும் என்றும் அநுபவிப்பவனுகச் செய்து கொள்கின்ருன் என்பது கருத்து. 'செய்துகொள்கின்ருன்' என்பதால், முன்னே விவரித்த ஹேதுக்களால் இவனுக்கு ஆசார்ய ப்ராப்தி யுண்டாய், ஆசார்யர்கள் தத்வஹித புருஷார்த்த விஷயகமான ஜ்ஞாநத்தை இவனுக்கு உபதேசித்தார்கள் என்பது தாத்பர்யம். தன் ஆத்மாவின் ஸ்வரூப ஜ்ஞாநமுண்டான பின், அவன் அந்த ஸ்வரூப ப்ராப்தி ரூபமான கிங்கரத்வாதி ராஜ்யமெனப்படும் புருஷார்த்தத்தை அடைந்து அநுபவிக்க விரும்புகின்ருன். அதை அவன் அடைவதற்கு ப்ரதிபந்தகங்களாய் நிற்கும் ஸர்வபாபங்களினுடைய விமோக்ஷணத்தின் பொருட்டு, ரரண்யன், ஸ்வயமே விதித்தருளிய ரரணுகதி யெனும் உபாயத்தைப் பற்றுகின்ருன்; உபாயாநுஷ்டாநம் பண்ணின பின்பு அதன் பலனுக, இந்த லோகத்தில் இருக்கும் வரையில் ராஸ்த்ர வேத்யமானவையும், பகவான் உகந்தருளினவையுமான கைங்கர்யங்கள் ஆரம்பமாகத் தனது ரேஷவ்ருத்தியைக் கடைப்பிடிக்கின்ருன். சரீராவஸாநத்தின் பிறகு அவன் ஈரவரன் திருவுள்ளத்தை ஸாக்ஷாத்தாக அறிந்து, அந்த ரேஷவ்ருத்தியைப் பிற்காலம் என்றும் இழவாதபடி அடைந்து காப்பாற்றிக்கொள்கின்ருன் என்பது கருத்து.

பத்ராதிபர்.

(இன்னும் வரும்)

ஸ்ரீ:.

ஸ்ரியை நம:.

ஸ்ரீமதே லக்ஷ்மீ ஹயக்ரீவாய நம:.

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# ஸ்ரீ பாஞ்சராத்ரம்.*

## (முதல் பாகம்.)

“ஸாத்வதஸம்ஹிதம் பரப்ரஹ்ம ஷாட்குண்யவிக்ரஹம் ।
பஞ்சராத்ரஸ்ய க்ருத்ஸ்நஸ்ய வக்தா து பகவான் ஸ்வயம் ॥”

[ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன்]

[ஸ்ரீ பாஞ்சராத்ர மென்பது மிகப் பெரிதான ஒரு ஸாஸ்த்ரம். அதைப் பற்றி அஜ்ஞனயிருக்கும் அடியேன் ப்ரஸ்தாவிக்க யத்நிப்பதைப் பெரியோர்கள் க்ஷமித்தருள வேணும். ஸ்ரீ பாஞ்சராத்ர ஸம்பந்தமாக ஸ்ரீ ஆளவந்தாரும் ஸ்ரீ பாஷ்யகாரரும் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனும் பஹுவான விசாரத்தைச் செய்து அவர்களுக்கு ந்யாய்யமாகத் தோன்றின ஸித்தாந்தத்தைச் செய்திருக்கின்றார்கள். அந்த க்ரந்தங்களி லுள்ள சில விஷயங்களை யதாமதி ஸங்க்ரஹித்து அந்த ஸங்க்ரஹத்தை மூன்று ப்ரகாரமாக விஜ்ஞாபநம் செய்துகொள்ளலா மென்பது அடியேனுடைய கருத்து. ஸ்ரீ பாஞ்சராத்ர மென்பது ஆதுநிக மென்று சிலர் நினைத்திருக்கிறார்கள். அது அப்படி யன்று என்பதை முதலில் நிரூபிக்கிறேன். இரண்டாவது, அந்த ஸாஸ்த்ரம் நமக்குப் போதிப்பது யாது என்பதை விவரிக்கிறேன். மூன்றாவது, அந்த ஸாஸ்த்ரத்தின் மீது மதாந்தரஸ்தர்கள் செய்யும் தூஷணங்கட்கு நமது ஆசார்யர்கள் எவ்வித ஸமாதாநத்தைச் செய்திருக்கிறார்கள் என்பதை ஸங்க்ரஹிக்கிறேன்.]

---

* இது, இம்மாஸத்தில் [19. 11. 16] மயிலாப்பூரில் நடந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் ஸங்கத்தில் ஸ்ரீ. உ.ஸ. எஸ். வாஸுதேவாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸம்.

ஸ்ரீ விஶிஷ்டாத்வைதம் அத்வைதம் த்வைதம் என்று வ்யவஹரிக்கப்படும் மூன்று மதங்களுள் நாம் அவலம்பித்திருக்கும் மதம் ஸ்ரீ விஶிஷ்டாத்வைதம் என்பதே. இதைத் தான் நாம் இப்பொழுது ஸ்ரீ ராமாநுஜ மத மென்றும் ஸ்ரீ வைஷ்ணவ மத மென்றும் வ்யவஹரிக்கின்றோம். ஶங்கராசார்யர் காலத்திலும் அதற்குக் கொஞ்சம் முந்தியுள்ள காலங்களிலும் இதற்கு ஸ்ரீ பாகவத மத மென்று பெயர் வழங்கிவந்ததாகத் தெரிகிறது. ஸ்ரீவ்யாஸ ஸூத்ரத்திற்குப் பாஷ்யம் எழுதிவரும்பொழுது “[illegible]” என்னும் ஸூத்ர வ்யாக்யாநாவஸரத்தில், ஶங்கராசார்யர் ‘[illegible]’ என்று நம்முடைய மதத்தை உபந்யஸித்துப் பிறகு நிராகரிக்க ஆரம்பிக்கிறார். அதற்கும் முந்தின காலங்களில் இதற்குப் பௌதாயந மதமென்றும் வ்ருத்திகார மதமென்றும் வ்யவஹாரம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. அதாவது : மஹர்ஷி போதாயநரால் ஒரு வ்ருத்திரூபமாக ஸ்ரீ வ்யாஸ ஸூத்ரங்களுக்குச் செய்யப்பட்ட தாத்பர்யார்த்த நிரூபணத்தையே நமது மதம் கைக்கொண்டிருக்கின்றது என்றும், இது, ருஷிப்ரோக்தங்களான வ்ருத்திகளை நிராகரித்துவிட்டுத் தமக்குத் தோன்றும் அர்த்தங்களை நிரூபிக்கும் அர்வாசீநர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள சில மதாந்தரங்களைப்போன்றதன்று என்றும் நாம் அறிகிறோம். அதனாலேயே இதற்கு ஆர்ஷ மதமென்று ஒரு ஏற்றமு முண்டு.

இந்த மதத்தின் ஸ்வரூபத்தை நாம் கொஞ்சம் விசாரித்தால் ‘[illegible]’ என்கிறபடி ஸ்ரீமந்நாராயணனையே ப்ரதிபாதிக்கும் ஶ்ருதியை இது மூலாதாரமாக உடையது என்பதை நாம் அறிகிறோம். பகவானுடைய ஸ்வரூப ரூப குண விபூதி சேஷ்டிதங்களை விளக்கும் ஶ்ருதியை ஆதாரமாகவுடைய க்ரந்தங்கள் பல உண்டு. அவைகளுள் ஸ்ரீ வ்யாஸ ஸூத்ர மென்பது ஒன்று. அதற்குத் தான் ஸ்ரீ ராமாநுஜாசார்யர் என்னும் ஸ்ரீ பாஷ்யகாரர், ஸ்ரீ போதாயநராலும் பூர்வாசார்யர்களாலும் செய்யப்பட்டுள்ள வ்ருத்தி பாஷ்யங்களை அவலம்பித்து ஸ்ரீ பாஷ்

யம் என்னும் மஹோபகாரகமான க்ரந்த ரத்நத்தைச் செய்திருக்கிறார். அதைக்கொண்டே நாம், தத்வார்த்தத்தைத் தெரிந்து கொள்ளுகிறோம். இதே ரீதியாக ஸ்ரீ பாஞ்சராத்ர ஸம்ஹிதைகளென்று பல ஸம்ஹிதைகள், அதி விததமாயும் கஹநமாயும் கம்பீரமாயுமுள்ள ஶ்ருதியின் ஸாரதமமான அர்த்தத்தை மந்தமதிகளான நமக்கு எளிதில் தெரிவிக்கும்படி ஒரு ஶ்ருதி ஸங்க்ரஹம் போல ப்ரவ்ருத்தித்திருக்கின்றன என்பதையும் நாம் பார்க்கின்றோம்.

"இதம் மஹோபநிஷதம் சதுர்வேதஸமந்விதம்।
ஸாங்க்யயோக க்ருதாந்தேந பஞ்சராத்ராநுசப்திதம்।
வேதாந்தேஷு யதாஸாரம் ஸங்க்ருஹ்ய பகவான் ஹரி:॥
பக்தாநுகம்பயா வித்வான் ஸஞ்சிக்ஷேப யதாஸுகம்॥"

என்கிறபடி இந்த ஸம்ஹிதைகள், பரமபுருஷார்த்தமென்ன, ததுபாயமென்ன, தத்விதிகர்த்தவ்யதையென்ன இவைகளை ஶ்ருதியிலிருந்து ஸங்க்ரஹிக்கின்றனவென்றே நாம் தெரிந்துகொள்ளுகிறோம். ஸூத்ரங்களும், பாஷ்யங்களும் தத்வார்த்தத்தை உணர்த்துவதுபோல இந்த ஸம்ஹிதைகள் பகவானுடைய ஆராதந விதியில் பர்யவஸிக்கின்றன இப்படி ஒரே ஶ்ருதியிலிருந்து ப்ரவஹித்துநிற்கும் இரண்டு ஸங்க்ரஹங்களுமே நமது ஸ்ரீ வைஷ்ணவ மதத்துக்கு முக்ய அவலம்பங்கள். எப்படியானுல் ஸூத்ரோக்த தத்வார்த்த நிரூபணமின்றிக்கு நமக்குப் பரமபுருஷ ஸ்வரூபாதி ஜ்ஞாநம் ஏற்படாதோ, அப்படியே ஸ்ரீ பாஞ்சராத்ரோக்த பகவதாராதந மின்றிக்கு நமக்குப் பரம புருஷார்த்த ப்ராப்தி ஸம்பவிக்காது என்பதுதான் நமது கொள்கை. நாம் விஶிஷ்டாத்வைதி என்று சொல்லிக்கொள்வதற்கும், ஸ்ரீ வைஷ்ணவன் என்று சொல்லிக்கொள்வதற்கும் இவை இரண்டுமே காரணங்கள். இப்படி இவை இரண்டையுமே, போதாயந ப்ரப்ருதிகளான த்ரமிட குஹதேவ டங்க பாருசி முதலியவர்கள் எல்லாரும் அநாதி காலமாகத் தமது மதத்திற்கு முக்ய ப்ரமாணமாய் ஒத்துக்கொண்டிருந்ததாகத் தெரியவருகிறது.

இந்தப் பாஞ்சராத்ரத்தை வேத மூலமான ஒரு க்ரந்தமாக ஒத்துக்கொள்ளாமல், வேதத்திற்கும் இது ஜ்யாயஸ் என்று சொல்

வார் சிலர்; மற்றும் சிலர், வேதத்திற்கு 'ஏகாயந ஶாகை' என்று ஒரு ஶாகை பூர்வம் இருந்த தென்றும், அது தான் இப்பொழுது பாஞ்சராத்ர ஸம்ஹிதைகளாகக் காணப்படுகின்றது என்றும் சொல்வர். இப்படிச் சொல்வதெல்லாம் ப்ரமாணத்துக்குப் பொருந்தாது என்பதை நாம்,

"𑌵𑍇𑌦𑌾𑌨𑍇𑌕𑍇𑌷𑍁 𑌯𑌥𑌾𑌸𑌾𑌰𑌂 𑌸𑌂𑌗𑍃𑌹𑍍𑌯 𑌹𑌰𑌿𑌵𑌾𑌙𑍍𑌮𑌿𑌭𑌿𑌃 ।
𑌸𑌾𑌰𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑌂𑌜𑍍𑌞𑌯𑌾 𑌵𑌿𑌹𑌿𑌤𑌂 𑌸𑌵𑌿𑌶𑍇𑌷𑌂 𑌯𑌥𑌾𑌶𑍍𑌰𑌵𑌮𑍍 ॥"

இத்யாதியான ஸ்ரீ பாஞ்சராத்ர வாக்யங்களினாலேயே அறிகிறோம். தவிரவும், நமது ஆசார்யர்களான ஸ்ரீ ஆளவந்தார், ஸ்ரீ பாஷ்யகாரர் முதலிய எல்லாரும் இந்தப் பாஞ்சராத்ரத்தை வேத மூலமென்று ஒத்துக்கொண்டிருப்பதாகவே அவர்களுடைய ஸூக்திகளிலிருந்து ஏற்படுகிறது. ஆகையால், இதை வேதத்தை விட ஜ்யாயஸ் என்றாவது, வேதத்தில் ஒரு பாக மென்றாவது சொல்வது ஒவ்வாது. தவிரவும்,

"𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌤𑌾 𑌛𑌨𑍍𑌦𑌸𑌾𑌂 𑌵𑌕𑍍𑌤𑌾 𑌪𑌞𑍍𑌚𑌰𑌾𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌯𑌃 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍"

என்னும் இடத்திலும் ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகன், "வேதங்களை ப்ரவசநம் பண்ணினவனும் பாஞ்சராத்ரத்தைத் தானே அருளிச்செய்தவனுமான" என்று பூர்வம் வேத ப்ரவசநத்தைச் சொல்லி, பிறகு பஞ்சராத்ர வசநத்தைப்பற்றி ப்ரஸ்தாவித்திருக்கிறபடியால், முதலில் ஶ்ருதி ஏற்பட்டதென்றும், பிறகு அதனை ஆதாரமாகக்கொண்டு பஞ்சராத்ரம் சொல்லப்பட்ட தென்றும் நாம் அறிகிறோம்.

ஆனால் இப்படிப்பட்ட பஞ்சராத்ரத்தைப்பற்றிச் சிலர், அது ஆலயாதிகளைப்பற்றியும், அவ்விடத்திற் செய்யப்படும் விக்ரஹாராதநத்தைப்பற்றியும் மட்டில் பேசும் க்ரந்தமென்றும், தம்மால் நித்யம் அநுஷ்டிக்கப்படும் கர்மங்களுக்கும் பரமபுருஷார்த்த ப்ராப்திக்கு உபயுக்தமான ஜ்ஞாந ஸம்பாதநத்துக்கும் இது அநுபயுக்த மென்றும் இத்யாதியான தவறுதலான எண்ணத்தைக் கொண்டிருக்கிறார்கள். மற்றும் சிலர், இந்தப் பாஞ்சராத்ர மென்பது அர்வாசீநமானது; சில பக்ஷபாதிகளாற் செய்யப்பட்டுப் புராதந க்ரந்தம்போல ப்ரகடநம் செய்யப்பட்டிருக்கின்றது என்று

அபிப்ராயப் படுகிறார்கள். இதுவும் தவறுதலான எண்ண மென்பதை இதைப்பற்றி நாம் கொஞ்சம் விமர்ஶித்தால் தெரிந்து கொள்ளலாம். முதலில் வேதார்த்தத்தின் தத்வத்தை ப்ரத்யக்ஷமாக அறிந்திருக்கும் பாராஶர்ய ப்ரப்ருதிகள் மஹாபாரதம் முதலிய க்ரந்தங்களில் இந்த பகவத்ஶாஸ்த்ரத்தின் ப்ராமாண்யத்தைப் பஹுப்ராகாரமாக நிர்வஹித்திருக்கிறார்கள் என்பது ஸுப்ரஸித்தம்.

“𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍈𑌃 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑍈𑌰𑍍𑌵𑍈𑌶𑍍𑌯𑍈𑌃 𑌶𑍂𑌦𑍍𑌰𑍈𑌶𑍍𑌚 𑌕𑍃𑌤𑌲𑌕𑍍𑌷𑌣𑍈𑌃 । 𑌅𑌰𑍍𑌚𑌨𑍀𑌯𑌶𑍍𑌚 𑌸𑍇𑌵𑍍𑌯𑌶𑍍𑌚 𑌨𑌿𑌤𑍍𑌯𑌯𑍁𑌕𑍍𑌤𑍈𑌃 𑌸𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 ॥ 𑌸𑌾𑌤𑍍𑌵𑌤𑌂 𑌵𑌿𑌧𑌿𑌮𑌾𑌸𑍍𑌥𑌾𑌯 𑌗𑍀𑌤𑌃 𑌸𑌂𑌕𑌰𑍍𑌷𑌣𑍇𑌨 𑌯𑌃” ॥

என்று ப்ரஹ்ம க்ஷத்ரிய வைஶ்ய ஶூத்ரர்களாகிற நாலுவர்ணத்தாராலும் பஞ்சராத்ரோக்த மார்க்கத்தினால் பகவதர்ச்சநாதிகம் செய்யப்பட வேண்டிய தென்று ஸ்ரீ பாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடியால், இந்தப் பாஞ்சராத்ர மதம் மஹாபாரத காலத்திற்கும் முற்பட்டதென்பது வ்யக்தம்.

“𑌇𑌦𑌂 𑌶𑌤𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌿 𑌭𑌾𑌰𑌤𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌾𑌤𑍍 ।
𑌆𑌵𑌿𑌧𑍍𑌯 𑌮𑌤𑌿𑌮𑌨𑍍𑌥𑌾𑌨𑌂 𑌦𑌧𑍍𑌨𑍋 𑌘𑍃𑌤𑌮𑌿𑌵𑍋𑌦𑍍𑌧𑍃𑌤𑌮𑍍 ॥
𑌨𑌵𑌨𑍀𑌤𑌂 𑌯𑌥𑌾𑌦𑌧𑍍𑌨𑍋 𑌦𑍍𑌵𑌿𑌪𑌦𑌾𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌯𑌥𑌾 ।
𑌆𑌰𑌣𑍍𑌯𑌕𑌂 𑌚 𑌵𑍇𑌦𑍇𑌭𑍍𑌯 𑌓𑌷𑌧𑍀𑌭𑍍𑌯𑍋 𑌯𑌥𑌾𑌮𑍃𑌤𑌮𑍍 ॥
𑌇𑌦𑌂 𑌮𑌹𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ।
𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌯𑍋𑌗𑌕𑍃𑌤𑌾𑌨𑍍𑌤𑍇𑌨 𑌪𑌂𑌚𑌰𑌾𑌤𑍍𑌰𑌾𑌨𑍁𑌶𑌬𑍍𑌦𑌿𑌤𑌮𑍍 ।
𑌇𑌦𑌂 𑌶𑍍𑌰𑍇𑌯 𑌇𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌇𑌦𑌂 𑌹𑌿𑌤𑌮𑌨𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ।
𑌋𑌗𑍍𑌯𑌜𑍁𑌃𑌸𑌾𑌮𑌭𑌿𑌰𑍍𑌜𑍁𑌷𑍍𑌟𑌮𑌥𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌿𑌰𑌸𑍈𑌸𑍍𑌤𑌥𑌾 ॥
𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌵𑍈 𑌏𑌤𑌦𑍇𑌵𑌾𑌨𑍁𑌶𑌾𑌸𑌨𑌮𑍍 ।”

என்றும்,

“𑌅𑌵𑌶𑍍𑌯𑌂 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑍋 𑌦𑍀𑌕𑍍𑌷𑌾𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍇𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌯𑌤𑍍𑌨𑌤𑌃 ।
𑌦𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌯 𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌪𑍍𑌰𑌸𑍀𑌦𑍇𑌨𑍍𑌨𑌾𑌨𑍍𑌯𑌥𑌾 𑌹𑌰𑌿𑌃 ॥
𑌵𑌸𑌨𑍍𑌤𑍇 𑌦𑍀𑌕𑍍𑌷𑌯𑍇𑌦𑍍𑌵𑌿𑌪𑍍𑌰𑌂 𑌗𑍍𑌰𑍀𑌷𑍍𑌮𑍇 𑌰𑌾𑌜𑌨𑍍𑌯𑌮𑍇𑌵 𑌚 ।

ஸாங்க்யம் யோக: பாஞ்சராத்ரம் வேதாரண்யகமேவ ச ।
ஸ்ரீ பஞ்சராத்ரஸ்ய க்ருத்ஸ்நஸ்ய வக்தா நாராயண: ஸ்வயம் ॥"

என்றும் பஹுப்ரகாரமாக ஸ்ரீ பாரதத்தில் ஸ்ரீ பாஞ்சராத்ரத்தைப்பற்றி ஶ்லாகித்திருப்பதை நாம் பார்க்கிறோம். மற்றும் ஓரிடத்தில், ஸ்ரீ வ்யாஸரே,

"வ்யூஹ்யாத்மாநம் சதுர்தா வை வாஸுதேவாதிமூர்த்திபி: ।
ஸ்ருஷ்ட்யாதீந் ப்ரகரோத்யேஷ விஶ்ருதாத்மா ஜநார்தந: ॥"

என்று, பகவான், வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்த ரூபமாக நாலு விதமாய்த் தன்னை வ்யூஹித்துக்கொண்டு, ஜகத்தின் ஸ்ருஷ்டி முதலிய கார்யங்களைச் செய்துவருகிறான் என்று சொல்லியிருக்கிறார். இந்த மாதிரியான சதுர்வித வ்யூஹம் பஞ்சராத்ரத்திற்கு அஸாதாரணமான கொள்கை யானதால், அக்காலத்தில் பாஞ்சராத்ரம் பஹுதா ப்ரமாணீக்ருதம் என்று நாம் அநுமானிக்கக்கூடும். தவிரவும், ஸ்ரீ மஹாபார்தத்தின் காலத்திற்குப் பஹு காலம் முற்பட்டே ஸர்வ ஸம்மதமாக வழங்கிவந்து, பிறகு மஹாபாரதத்தில் ப்ரகடநம் செய்யப்பட்டிருக்கும் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம் என்னும் ஸ்ரீ விஷ்ணு ஸ்தோத்ரத்தில் இந்த வ்யூஹ விபாகத்தைப்பற்றி இரண்டு இடங்களில் பேசப்பட்டிருக்கின்றது.

"சதுராத்மா சதுர்வ்யூஹ ஶ்சதுர்தம்ஷ்ட்ர ஶ்சதுர்புஜ: ॥"
"சதுர்மூர்த்தி ஶ்சதுர்பாஹு ஶ்சதுர்வ்யூஹ ஶ்சதுர்கதி:"

என்னும் வாக்யங்கள் இருக்கின்றன. இதற்கு வ்யாக்யாநமும் பின்வருமாறு செய்யப்பட்டிருக்கின்றது. ஓரிடத்தில் 'சதுர்வ்யூஹ:' என்னும் பதம் பாஞ்சராத்ரத்திற் சொல்லப்பட்டுள்ள வாஸுதேவாதி பேதங்களைக் குறிக்கின்றது என்றும், மற்றோரிடத்தில், பஹ்வ்ருசோபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்குமான ஶரீர புருஷன், ச்சந்த: புருஷன், வேத புருஷன், மஹா புருஷன்

என்னும் விபாகத்தைக் குறிக்கின்ற தென்றும் வ்யாக்யாதாக்கள் சொல்லியிருக்கிறார்கள். இரண்டு இடங்களிலும் அந்த மப்தம் இரண்டாவது அர்த்தத்தையே குறிக்கின்ற தென்றும், வ்யூஹ விபாகத்தைக் குறிக்கவில்லையென்றும் சொல்வது ஸரியன்று. அப்படிச் சொன்னால், அர்த்தபேதமின்றிக்கு ஒரே பதத்தைப் பலவிடங்களில் ப்ரயோகித்து, ஆயிரம் ஸங்க்யை கணக்குச் செய்யவேண்டுமென்பது ஸ்ரீ ஸஹஸ்ர நாமம் செய்தவரின் அபிஸந்தி என்று சொல்லும்படி ப்ரஸங்கிக்கும். அது அஸங்கத மன்றோ?

மாரீரக ஸூத்ரத்தில், கபில, கணபக்ஷ, பிக்ஷு, க்ஷபணக, பசுபதி முதலியவர்களின் ஸமயங்களை ப்ரதிக்ஷேபம் செய்தபிறகு, பாஞ்சராத்ராதிகரணம் வருமிடத்தில், 'உத்பத்த்) யஸம்பவாத்,' 'நசகர்த்து: கரணம்' என்னும் இரண்டு ஸூத்ரங்களால் பாஞ்சராத்ர ஸம்பந்தமான பூர்வ பக்ஷத்தை உபக்ஷேபம் செய்துகொண்டு, "விஜ்ஞாநாதிபாவேவா ததப்ரதிஷேத:," "விப்ரதிஷேதாச்ச" என்னும் இரண்டு ஸூத்ரங்களால், ஸ்ரீ வ்யாஸர் பாஞ்சராத்ர ப்ராமாண்யத்தை ஸமர்த்தித்திருக்கிறதாக, ஸ்ரீ யாமுந முநியும் ஸ்ரீ பாஷ்யகாரரும் ஸித்தாந்தம் செய்திருப்பதை நாம் எல்லோரும் அறிவோம். இதனாலும் வ்யாஸருடைய காலத்திற்கு முந்தியே பஞ்சராத்ரம் ப்ரசாரம் பெற்றிருந்தது என்று தெரிகிறது. சிலருக்கு இவ்விடத்தில் ஸ்ரீ பாஞ்சராத்ர ஸமர்த்தநம் ஸ்ரீ வ்யாஸருடைய அபிப்ராயமா? இல்லாவிட்டால் அதன் ப்ரதிக்ஷேபமே அவருடைய கருத்தா? என்று ஒரு ஸந்தேஹம் ஜநிக்கக்கூடும். கபிலாதி தந்த்ராந்தரங்களுடன் ஸஹபாடம் ஸம்பவித்திருப்பதே இம்மாதிரியான ஸந்தேஹத்திற்கு முக்யமான காரணம். முதலில், ஸ்ரீ வ்யாஸர் தம்மால் செய்யப்பட்ட ஸ்ரீ மஹாபாரதத்தில் ஸ்ரீபாஞ்சராத்ரத்தைப்பற்றி ஏற்றமாகப் பேசியிருக்கிறபடியால், அதன் நிராகரணத்தை இவ்விடத்தில் அபிப்ராயப்பட்டிருக்க மாட்டார் என்று ஊஹிக்கலாம். தவிரவும், ஸ்ரீ யாமுநாசார்யரும் ஸ்ரீ பாஷ்யகாரரும் இது விஷயமாகச் செய்திருக்கும் சர்ச்சையைப் பார்க்

கும் நமக்குப் பாஞ்சராத்ர ஸமர்த்தநமே ஸ்ரீ வ்யாஸருடைய அபி ப்ராய மென்று ஒரு நிர்ணயம் ஏற்படுகின்றது. மேலும், ஸ்ரீ வ்யா ஸருடைய கருத்திற்கு விருத்தமாக ஸ்ரீ போதாயநர் வ்ருத்தி விவா ணம் செய்திருப்பர் என்பது அவிச்'வஸநீயமாகிற படியாலும், ஸ்ரீ போதாயநரால் செய்யப்பட்டுள்ள வ்ருத்தியை அநுஸரித்தே தாம் ஸ்ரீ பாஷ்யம் செய்வதாக ஸ்ரீ பாஷ்யகாரர் ப்ரதிஜ்ஞை செய்திருக் கிறபடியாலும், ஸ்ரீ வ்யாஸருடைய அபிப்ராயம் ஸ்ரீ பாஷ்யகாரர் விவரித்திருக்கிறபடி இருக்கவேண்டுமே தவிர, அந்யதாவாக இரு க்க ஹேதுவில்லை யென்றும் நாம் ஊஹிக்கலாம். இந்தப் பாஞ்ச ராத்ராதிகரணத்தில் மட்டில் ஸ்ரீ போதாயந வ்ருத்திக்கு விருத்த மாகப் பாஷ்யம் செய்துவிட்டுத் தமது ப்ரதிஜ்ஞா பங்கத்தை ஸ்ரீ பாஷ்யகாரர் ஸம்பாதித்துக்கொள்வர் என்று நினைப்பது அவ ருடைய ஆர்ஜவத்தில் அதி விச்'வாஸங்கொண்டிருக்கும் நமக்கு உசிதமாகாதன்றோ? அப்படி ஸ்ரீ பாஞ்சராத்ரத்தில் ஸ்ரீ பாஷ்ய காரர் ஒரு வித துராக்ரஹம் கொள்வதற்கு யாதொரு ஹேது வையும் காணோம். இதைப்பற்றி விஸ்தாரமாகப் பிந்தி விசாரிப் போம். இது எப்படி இருந்தபோதிலும் உத்பத்ய ஸம்பவாதி கரணத்தில் ஸ்ரீ வ்யாஸர் பாஞ்சராத்ரத்தைப்பற்றியே பேசுகிறார் என்பது ஸர்வ ஸம்ப்ரதிபந்நமாகையால், அந்த மதம் அவர் காலத் திலேயே ப்ரசாரம் பெற்றிருந்தது என்பது வ்யக்தமாகின்றது.

(இன்னும் வரும்.)

எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே [illegible] நம:

# இவ்வருஷத்திய

# ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கம்.

இவ்வருஷத்திய ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்க ஸம்பந்தமாக, ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் கார்ய நிர்வாஹகர்கள் இரண்டு மூன்று மாஸ காலமாய்ப் பலவிதமான ஆலோசனைகளைச் செய்து, அவைகளில் ஒன்றும் த்ருப்திகரமாக இல்லை யென்பதைப் பார்த்து, இவ்வருஷத்திய ஸங்கத்தைச் சென்னையிலேயே நடத்துவதாக நிர்ணயம் செய்திருக்கின்றார்கள். ப்ராயேண, நமக்கு ஸர்வ ப்ரகாரத்திலும் ஸர்வ வித ப்ரதிபத்திக்கும் அர்ஹரும், முதல் மூன்று ஆழ்வார்களுக்குள் அர்யதமருமான ஸ்ரீ பேயாழ்வார் திருவவதார ஸ்தலமாயும், ஸ்ரீ ஆதிகேஶவப் பெருமாள் அர்ச்சா ரூபியாக எழுந்தருளி அலங்கரிக்கும் திவ்ய தேஶமாயும், ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகனுடைய விஶேஷித்த அநுக்ரஹத்திற்குப் பெரிய தொரு பாத்ரமாயும் ஶோபித்து நிற்கும் திருமயிலாப்பூரில், ஸ்ரீ கேசவனுடைய திருவடி வாரத்தில் ஸ்ரீ தேஶிகனது மண்டபத்தில், வருகிற மார்கழி மாஸம் 13உ ஶ்ரவண நக்ஷத்ரம் கூடிய புத வாஸரத்தில் 20 - நாழிகைக்கு மேல் அந்த ஸங்கம் உபக்ரமிக்கப்பட்டு, அன்றை திநத்திலும் அடுத்துவரும் வியாழன் வெள்ளி இந்த இரண்டுதிநங்களிலும் ஸ்ரீ கேஶவனுடைய அநுக்ரஹத்தினுல் நடை பெறலாம். அக்காலத்தில் யதா பூர்வம் அநேக வைதிக பண்டிதர்களும் லௌகிக ஜ்ஞாநவான்களும் தர்மஶாஸ்த்ரம் வேதாந்தம் முதலிய ஶாஸ்த்ரங்கள் ஸம்பந்தமான பல விஷயங்களைப்பற்றி உபந்யாஸங்களைச் செய்வார். நமது ஶாஸ்த்ரங்களிலும் நமது ஸித்தாந்தத்திலும் விஶ்வாஸமுள்ள அநேக ப்ரபுக்களும் அவர்களுடைய ஸாந்நித்யத்தினுல் ஸதஸ்ஸை அலங்கரிக்கலாம். இந்த மூன்று திநங்களிலும் பூர்வ ராத்ரியில், பகவானுடைய திவ்ய சேஷ்டிதங்கள், அவனது கல்யாண குணங்கள் இவைகளைப்பற்றிய திவ்ய கதைகளும் நடைபெறும். இவை யெல்லாவற்றுடன், வியாழன் வெள்ளி இந்த இரண்டு திநங்களிலும் காலையில் வேத வேதாந்த ஸம்பந்தமான வித்வத் ஸதஸ் ஒன்று நடக்கவேண்டு மென்றும், அதில் பெரிய வித்வான்கள் சேர்ந்து வாக்யார்த்தம் சொல்லி நமது பூர்வ பரிபாடியை லுப்தமாக வொட்டாமல் தடுத்து அதை நிலைநிறுத்த வேண்டு மென்றும் சிலர் அபிப்ராயப்பட்டு, அதை த்ருப்திகரமாக நடத்துவதற்கு

வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். அது நடைபெற்றால், இந்த வருஷத்திய ஸங்கத்திற்கு அது ஒரு புதிய அலங்காரமாக இருக்கும். விதேஶத்திலிருந்து இதம்பரமாக வரும் ஆஸ்திகர்களுக்கு இந்த ஸங்க காலத்தில் எவ்வித கஷ்டமும் நேராமல் யதாஶக்தி ஆதித்யாதிகளைச் செய்ய ஸ்ரீ மயிலாப்பூர் வாஸிகளான பாகவத ப்ரவணர்கள் எல்லாரும் அதிமாத்ரம் உத்ஸுகர்களாக இருப்பதாகவும் தெரியவருகிறது. பகவத் கைங்கர்ய புத்தியுடன் செய்யப்படும் இந்த ப்ரயத்நத்தைப் பகவானே நிர்விக்நமாகத் தலைக் கட்டிக்கொள்ள வேணுமென்று நாம் ஹார்த்தமாக ப்ரார்த்திக்கிறோம். பஹுஜநஸாத்யமான இந்த வ்யாபாரத்தை, ஸகல ஆஸ்திகர்களும் தங்கள் தங்கள் கார்யம் போலத் திருவுள்ளம் பற்றி, யதாஶக்தி எந்த ப்ரகாரத்தினாலாவது இந்த விஷயத்தில் உபகரிப்பதுடன், ஸங்க காலத்தில் ஸந்நிஹிதர்களாக இருந்து அதைப் பூர்த்திசெய்து வைக்க வேண்டுமென்பதும் நமது ப்ரார்த்தனை.

இதைப்பற்றிய மற்றை விஷயங்கள் அடுத்த ஸஞ்சிகையில் விஸ்தாரமாக ப்ரசுரம் செய்யப்படும். இந்த ஸங்கத்திற்கு த்ரவ்ய ஸஹாயம் செய்ய வேணுமென்று திருவுள்ளம் உள்ளவர்கள் அந்த த்ரவ்யத்தைக் கீழ்க்கண்டிருக்கும் அடியேனுடைய விலாஸத்திற்கு அனுப்பினால், அப்படி வரும் த்ரவ்யத்திற்கெல்லாம் ப்ருதக்காகக் கணக்கு வைத்துக்கொண்டு, அந்தக் கணக்கை, ஸங்கம் முடிந்த பிறகு வெளிவரும் 'ஸ்ரீ வேதாந்த தீபிகை' ஸஞ்சிகையில் ப்ரசுரம் செய்வோம். இந்த ஸங்கத்தின் நிர்வாஹகர்களால் உத்தேஶிக்கப்படுமளவு த்ரவ்யஸஹாயம் நேர்ந்தால், ஸங்கத்தை மிகச் சிறப்புடன் நடத்தலா மென்பது அவர்களுடைய நம்பிக்கை.

மயிலாப்பூர்,
21-11-16.

**எஸ். வாஸுதேவன்.**
ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின்
**கார்யதர்ஶி.**

---

ஸ்ரீ:.

# கடிதங்கள்.

## வ்யாகரண விஷய ப்ரஶ்நத்திற்கு ஸமாதாநம்

(1)

**ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு :—**

சென்ற ஸஞ்சிகையில் 'உடி: ஸூர ஸம்ஹோ:' என்னும் ஸூத்ர விஷயமாக ஒரு ஸம்ஶயம் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. அதற்குப் பின்வருமாறு ஸமாதாநமுண்டு :—

'உத꞉ ஸ்தா ஸ்தம்போ꞉' என்பதற்கு முந்தின ஸூத்ரம் 'தோர்லி' என்பது. அந்தப் பூர்வ ஸூத்ர்த்திலிருந்து 'தோ꞉' என்று அநுவ்ருத்தி செய்துகொண்டு, 'உத꞉ தோ꞉ பரயோ꞉ ஸ்தா ஸ்தம்போ꞉' என்று அந்வயித்து 'உத் ஶப்த ஸம்பந்தியான தவர்க்கத்தைக் காட்டிலும், அதாவது தகாரத்தைக் காட்டிலும் பரங்களாக இருக்கும் ஸ்தா ஸ்தம்பு தாதுக்களுக்கு' என்று அர்த்தம் சொல்ல வேணும். அப்படி அர்த்தம் சொல்வது ந்யாயத்திற்கு ஒத்தது; ப்ரக்ருத ஶங்கையையும் நிவ்ருத்தி செய்கிறது.

ஸ்ரீ வாஸுதேவாசார்யர் ஏற்கெனவே இதற்குச் சொல்லியிருக்கும் ஸமாதாந ரீதியாக, ஒரு ந்யாயத்திற்கும் எவ்வித ஸங்கோசமும் செய்து கொள்வதற்கு அவஶ்யமில்லை. 'சர்த்தாநுகரண ஸ்யாத ஐதள'. என்னும் ஸூத்ரத்திற்கு அர்த்தம் சொல்லுகையில்' 'ஐசோகாயணவி' என்னும் ஸூத்ரத்திலிருந்து 'சவி' என்று அநுவ்ருத்தி செய்து கொண்டு ஐசி' ஶப்த வர்த்தியான 'சவிபரே' என்று வ்யாக்யாநம் செய்தால் ஸர்வமும் ஸமஞ்ஜஸமாகிவிடும்.

பரசுபாக்கம்,
17-11-16.

ஆர். வி. க்ருஷ்ணமாசார்யர்.

---

(2)

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு :—

சென்ற ஐப்பிசி மாஸ தீபிகையில் ஸ்ரீ. தி. கிருஷ்ணமாசார்யர் ஸ்வாமி ஒரு ப்ரஶ்நம் செய்திருக்கிறார். அதற்கு மகாவித்வான்கள் அநேக ஸமாதாநங்களை எழுதலாம். அடியேனும் ஒரு ஸமாதாநத்தை எழுதத் துணிகிறேன். ஸஹ்ருதயர்கள் தோஷலவங்களை விலக்கி குணலேசங்களை க்ரஹித்துக்கொண்டு வாத்ஸல்யத்துடன் அடியேனை அநுக்ரஹிப்பார்கள் என்று நம்புகிறேன்.

I. ஸவர்ண ஸம்ஜ்ஞை என்பது வர்ணத்துக்கே தவிர ஸமுதாயத்திற்கு இல்லை. பூர்வ ஸவர்ண மென்றால் ஸவர்ணபத ஸமாகமத்தினால் பூர்வ வர்ண ஸவர்ணம் வருகிறதென்றே தாத்பர்யம். ப்ரக்ருதத்தில், 'உத꞉' 'உச' என்பவற்றைக் காட்டிலும் பரமான தாதுகளுக்குப் பூர்வ ஸவர்ணம் வருகிறதென்று சொன்னால் ஸவர்ண பதசேர்க்கையினால் பூர்வ வர்ணத்தையே வாங்கிக்கொண்டு தாதுவின் ஆதியான ஸகாரத்திற்குத் தகார ஆதேசம் சொல்லவேண்டும். ஸமுதாயத்தை வாங்கக்கூடாது. இதுவே ஸரியான ஸமாதாநமாகும்.

II. அல்லது 'உதஸ்தா ஸ்தம்போ:' என்னும் ஸூத்ரத்தின் முந்தின ஸூத்ரமான 'தோமிடு' என்னும் ஸூத்ரத்தில் இருந்து 'தோ:' என்கிறபதத்தை மட்டும் அநுவ்ருத்தி செய்துவந்து, 'உத:' என்பதை ஷஷ்ட்யந்தமாகவும் 'தோ:' என்பதைப் பஞ்சம்யந்தமாகவும் செய்துகொண்டு 'உதவபரெவாயஸ்தவமடு(சுயடுரசு தகாரவணவ வு சுருதெ) தஸ்த்ரள யள ஸ்தாஸ்தம்ஹள தயொ: வடுவடுஸவண டுஷெம்ஸாவவதி' உதவயமான யாதொரு தவர்க்கமுண்டோ என்றால், ப்ருக்ருதத்தில் உசு என்பதில் இருக்கும் தகாரமே, அதைக்காட்டிலும் பரமான ஸ்தாஸ்தம்ஹு தாதுக்களுக்குப் பூர்வ ஸவர்ணதேசம் வருகிறது. 'சூஷெ:வாஸ' என்னும் ஸூத்ரப்படிக்கு தாதுவின் ஆதியான ஸகாரத்திற்கு என்று ஏற்படுகிறது. ஆதலால் உசு ஸமுதாய ஸவர்ணம் தேடவேண்டிய அவஶ்யமில்லை. இந்த இரண்டு ஸமாதாநங்களும் ப்ராமாணிகம். ஆதலால் மஹாந்கள் அங்கிகரிப்பார்களென்பதில் ஐயமில்லை.

விசய விவேசநம் செய்தவர், பூர்வபர நிர்வசநம் செய்து 'சுவஷ்தநீசுரணவஸ' ஸூத்ரத்தில் எப்படி அச்சப்த ஸமுதாயத்திற்குக் கார்யம் வருகிறதோ, அதுபோல் இந்த ஸூத்ரத்திலும் 'உத்' ஸமுதாயத்திற்கே ஸவர்ணவர்ணதேசம் வரவேண்டும் என்று 'சுவஷ்து' ஸூத்ரத்தை த்ருஷ்டாந்தமாகக் கொடுத்திருக்கிறார். விசய ஸூத்ரத்திற்கும் திருஷ்டாந்த ஸூத்ரத்திற்கும் ஸம்பந்தமே இல்லை. உதஸ்தா - ஸூத்ரத்தின் 'உத: பரஸ்ய' என்பதால் பரத்திற்கு மாத்திரம் கார்யம் விதிக்கப்பட்டிருக்கிறது. 'ஸஹ:வ ஙிவடுவாயொ:' என்றும் அதிகார ஸூத்திரத்தின் அதிகாரத்திற் குட்பட்டிருப்பதால் ஷி ஸூத்ரத்தில் பூர்வபர உபயத்திற்கும் கார்யம் விதிக்கப்படுகிறது. த்ருஷ்டாந்த தார்ஷ்டாந்திகங்களுக்கு வைஷம்யமிருக்கிறது என்பதை மஹாந்கள் நன்று உணரலாமென்றும் விஜ்ஞாபநம் செய்துகொள்ளுகிறேன்.

பட்டுக்கோட்டை
6-11-16.

வி. ஆர். திருமலைதாதாசார்யர்.